விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 07 புதன்கிழமை (20.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 091

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## அமெரிக்காவின் இறுதி வரைபில் சர்வதேச விசாரணை இல்லை!

### ஏமாற்றம் என்கின்றனர் தமிழ் மக்கள்

(வாஷிங்டன்)

இலங்கைக்கு எதிராக திருத்தப்பட்ட இறுதி வரைபு தீர்மானம் ஐ.நா. ம்னித உரிமை கவுன்சில் கூட்டத்தில் அமெரிக்கா வெளியிட்டது. இத்தீர்மானத்தில் சர்வதேச விசாரணை என்ற கோரிக்கை நீக்கப்பட்டுள்ளது தமிழர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இத்தீர்மானம் தற்போது நான்காவது முறையாக திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட போரின் போது நடைபெற்ற மனித உரிமைமீறல்கள்தொடர்பாகஜெனிவாவில்கடந்தமாதம்22ஆம்திகதிமுதல் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில்கூட்டத்தில்அமெரிக்கா தீர்மானம் கொண்டுவர உள்ளது.

முன்னதாக இலங்கையில்நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை 18 பக்கங்கள் கொண்ட அறிக்கையை கடந்த மாதம் சமர்ப்பித்தார்.

அதில், போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் பிரச்சினை

### இந்திய பாராளுமன்றில் அமளி நாள் முழுவதும் அவை ஒத்திவைப்பு

(புதுடெல்லி)

இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்திய பாராளுமன்றில் தி.மு.க மற்றும் அ.தி.மு.க உறுப்பினர்களின் அமளி காரணமாக பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

நேற்று காலை அவை கூடியதும், தி.மு.க, அ.தி.மு.க. மற்றும் பி.ஜே.பி, உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்பினர். அ.தி.மு.க., தி.மு.க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையின் மையத்திற்கு சென்று, இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவித்து சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். ஐ.நா., மனித உரிமை சபையில் இந்தியா நடந்து கொண்ட விதம் கண்டனத்திற்குரியது எனக் கூறி கோஷங்கள் எழுப்பினர்.

இதன்போது சபாநாயகர் சமாதானப்படுத்தும் முயற்சி தோல்வியடைந்ததால், அவையை நண்பகல் வரை ஒத்திவைத்தார். நண்பகல் 12 மணிக்கு லோக்சபா கூடிய போது, இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பான விவாதம் நடத்தப்பட்டது. (20ஆம் பக்கம் பார்க்க)

# மத்திய அரசிலிருந்து தி.மு.க. விலகியது!

### மந்திராலோசனையில் காங்கிரஸ்



(சென்னை)

இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்கா கொண்டு வந்த வரைபுத் தீர்மானத்தை இந்திய மத்திய அரசு நீர்த்துப் போகச் செய்து விட்டதாக கூறி, தி.மு.க. மத்தியில் அமைச்சரவையிலிருந்தும், ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்தும் விலகுவதாக அறிவித்திருக்கிறது. நேற்று சென்னையில் இதை செய்தியாளர்களிடையே அறிவித்த தி.மு.க தலைவர் கருணாநிதி, வெளியிலிருந்தும் அமைச்சரவைக்கு ஆதரவு தரப்படாது என்று அறிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குகளுக்கு பாதுகாப்பு

(சென்னை)

இந்தியாவின் பீகார் மாநிலம், புத்தகயாவில் இருந்து சென்னைக்கு சென்ற புத்தபிக்குகள் 160 பேரை தமிழக பொலிஸார் பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சென்னை மத்திய ரயில் நிலையத்தில் வந்திறங்கிய அனைத்து புத்த பிக்குகளையும் பாதுகாப்பாக வானில் ஏற்றி, ஏழும்பூரில் பொலிஸ் ஆணையாளர் அலுவலகம் எதிரில் கென்னத் லேனில் உள்ள புத்தமடத்தில் கொண்டு தங்கவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் தஞ்சை பெரிய கோவிலுக்கு வந்த புத்தபிக்குகள் மீது (20ஆம் பக்கம் பார்க்க)

## சிறுத்தைகளும் விலகின!

(சென்னை)

ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியதை அடுத்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் விலகுவதாக அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில், எங்களுடைய கோரிக்கையை மத்தி அரசு பரிசீலனை செய்யவில்லை.

எனவே, மத்திய ஆட்சியில் இருந்தும் கூட்டணியில் இருந்தும் விலகுகிறோம். வெளியில் இருந்தும் மத்திய அரசை ஆதரிக்க மாட்டோம் என்று திமுகதலைவர் கலைஞர் அறிவித்தார்.

தி.மு.க. விலகியதையடுத்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், ஆதரவை வாபஸ் பெற்றுக்கொள்கிறது என தொல்.திருமாவ்ளன் அறிவித்துள்ளார். (எ-11)

## இந்திய அரசின் அழுத்தத்தால் இலங்கை மீதான விசாரணை வாபஸ்

### சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானமானது இந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக கைவிடப்பட்டது என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக் காட்டியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரை முன்னிட்டு மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையால் இலங்கை தொடர்பில் ஒரு அறிக்கையை தாக்கல் செய்திருந்தார்.

இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு தனது அறிக்கை மூலம் அவர் பரிந்துரைத்திருந்தார். இதனைத் தொடர்ந்து ஜெனிவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா முன் வைத்தது. (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மாணவர் போராட்டம் சாதாரணமாக கருத முடியாது

### அமெரிக்கா எச்சரிக்கை



(வாஷிங்டன்)

தமிழீழத் தனியரசுக்கான பொதுவாக்கெடுப்பு உட்பட 8 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தில் தொடர் போராட்டங்கள் வெடித்துள்ள நிலையில், தமிழக மாணவர்களின் போராட்டத்தை சாதாரணமான விடயமாக கருதிவிட முடியாது என்றும், மாணவர் போராட்டம் குறித்து அமெரிக்கா மிகவும் கவனமாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்காவின் தூதுவர் எலின் சம்பர்லைன் டொனஹே தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழருக்கு ஆதரவாக தமிழகத்தில் மாணவர்களின் போராட்டம் பேரெழுச்சி கொண்டுள்ள நிலையில், மாணவர்களின் இந்தப் போராட்டம் குறித்து, ஜெனிவாவில் வைத்து அமெரிக்கத் தூதுவரிடம் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்கள் வினாவினர். (19ஆம் பக்கம் பார்க்க)

### மத்திய அரசிலிருந்து தி.மு.க. விலகல்

## கருத்துக் கூறமுடியாது - சோனியா அரசுக்கு ஆபத்தில்லை - சிதம்பரம்





(புதுடில்லி)

மத்திய அரசில் இருந்து தி.மு.க. வெளியேறியிருப்பது குறித்து கருத்துக் கூற முடியாதென காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார். அதேநேரம் மத்திய அரசுக்கு தி.மு.கவின் வெளியேற்றத்தால் பாதிப்பு இல்லை என மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய அரசிலிருந்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்தும் தி.மு.க. வெளியேறியிருப்பது குறித்து கருத்துத் தெரிவிக்கமுடியாதென்று கூட்டணியின் தலைவரும் காங்கிரஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் நடராசமணி (JP)

(அம்பாள் ஸ்ரோர்ஸ், முன்னாள் யமுனா ஏஜென்சி உரிமையாளரும், காலி பிரபல வர்த்தகரும்)

வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் நடராசமணி 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், வேலணை 1ஆம் வட்டாரம், ஆலம்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சதாசிவம் -செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், ஞானசொருபியின் அன்புக் கணவரும், சிவாஸ்கர் (பொறியியல் பீட 4ஆம் வருட மாணவன், பெரதேனியா), யமுனா (N.D.B வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாசிலாமணி (கனடா), நடனசிகாமணி, புஸ்பமாலா (கனடா), பிரபுசிகாமணி (கனடா), கலையரசி (கனடா), அமரர் சிவமணி மற்றும் மாதினியாள் (கனடா) ஆகியோரின் சகோதரனும், அமரர்களான தர்மலட்சுமி, இராசநாயகம் மற்றும் அனுசலட்சுமி, சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), தெய்வேந்திரன் (கனடா), தர்மசேனன் (கொழும்பு), வைஜெந்திமாலா (கொழும்பு), ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், காஞ்சனமாலா, சிவகலை, சுப்பிரமணியம், குகானந்தி, ஞானேஸ்வரன், சந்திரவதனா, விஜயரட்ணம், சுப்பிரமணியம், சுலோசனா, நாகேஸ்வரன், விஜிதா, அமிர்தகெளரி, பிரபாலினி, ஸ்ரீகரநாதன், பிரதீபா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2013) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தற்போதைய முகவரி:**
**566/1, கே.கே.எஸ் வீதி,**
**மனோகராச் சந்தி அருகாமை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதர சகோதரிகள்**
**மற்றும் மைத்துனர்கள்.**

(220)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞாபகம்

ஒரு நண்பர் யாருடனோ தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார். கதைத்து முடிந்ததும் நான் அவரைப் பார்த்து, ''இப்போது தொலைபேசியில் கதைத்த இலக்கம் என்ன?'' என்று கேட்டேன்.

அவர் தலையை சொறிந்து கொண்டு ஞாபகம் வரவில்லை என்றார்.

''சரி சேர்! அதை விடுங்கள்... உங்கள் மனைவி பெயர் என்ன?'' என்று கேட்டேன்.

''மாலதி'' என்று கூறினார்.

''என்ன சேர் இது வேடிக்கை... சற்று நேரத்திற்கு முன்னர் கதைத்த தொலைபேசி இலக்கம் மறந்து விட்டதாக கூறினீர்கள். எப்போதோ கல்யாணம் செய்த மனைவியின் பெயரை மறக்கவில்லை. அதை சரியாகச் சொல்லி விட்டீர்கள்'' என்றார்.

அவர் என்னை ஒரு மாதிரியாக பார்த்தார். அவர் அப்படி என்னை பார்த்ததிலே ஒன்றும் பிழையில்லை. ஏனென்றால்... நாம் எல்லோருமே அப்படித்தானே!

ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக தொலைபேசியில் கதைக்கிறோம். அதன்பின் கிடைக்கப் பெற வேண்டிய காரியம் முடிந்தவுடன் அந்த இலக்கம் நமக்கு அநாவசியமாகி விடும். அதனாலே மறந்து விடுகிறோம்.

இதற்குப் பெயர் தான் "தற்காலிக 'ஞாபகம்'' ஆகும். அதற்காக மனைவியினுடைய பெயரை மறக்க முடியுமா... அதை அடிக்கடி உபயோகப்படுத்துகிறோம்... அதனாலே மறப்பது கடினமாக இருக்கும்.

இதற்குப் பெயர்தான் "நிரந்தர ஞாபகம்''

தற்காலிக ஞாபகம் ஒரு மின்னல் மாதிரி தோன்றி மறையும். நிரந்தர ஞாபகம் ஒரு படிவம் போல மூளையிலே படிந்து விடும்.

ஒரே சம்பவத்தின் பல பிரதிகள் மூளையிலே பல்வேறு பகுதிகளிலேயும் படிவதனாலேயே... ஒன்று மறைந்தாலும் இன்னொன்று மறைவதில்லை.

இப்படிப்பட்ட நிலைமையிலேதான் ''தொண்டையிலே இருக்கிறது... வாய்க்கு வரமாட்டேன் என்கிறது'' என்று கூறுவார்கள்.

ஒருவருக்கு எந்தத் துறையில் ஆர்வமும் ஈடுபாடும் அதிகமாக இருக்கிறதோ அதில் ஞாபகசக்தி அதிகமாக இருக்கும். தொலைபேசி நிலையத்தில் வேலை செய்பவருக்கு இலக்கங்கள் எல்லாம் நல்ல ஞாபகமாக இருக்கும்.

அதுமாதிரி கவிஞர்களுக்கு வார்த்தைகள் நல்ல ஞாபகமாக இருக்கும்.

ஒரு மூளை... எண்களை விட, எழுத்துக்களை விட படங்களை மிகவும் சுலபமாக ஞாபகத்தில் வைத்திருக்கும். உதாரணமாக, ஒரு பையனுக்கு படித்தது எதுவும் ஞாபகத்திலே இல்லையென்றால், அவன் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்று அர்த்தம். மூளையைத் பொறுத்த வரைக்கும் ஞாபகசக்தி அதிகம் உள்ள மூளை; மறதியுள்ள மூளை அப்படியென்று ஒன்றும் கிடையாது. நினைவு வைத்துக் கொள்வதற்கு பயிற்சியளிக்கப்பட்ட மூளை, பயிற்சி அற்ற மூளை என்று சொல்லலாமா?

அதனாலே ஞாபக சக்தி என்பது நம்மிடம் இருக்கிற ஒருவகைப் பயிற்சி- எமது முயற்சியைப் பொறுத்துத் தான் அமையும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து நடத்தும் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டுள்ளதாக தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழாவில் குழுவின் போட்டிச் செயலர் ச.லலீசன் அறிவித்துள்ளார்.

நான்கு பிரிவுகளாக இப்போட்டி நடைபெறவுள்ளது.

இதற்கமைய கீழ் பிரிவில் தரம் 4, 5 மாணவர்களும் மத்திய பிரிவில் தரம் 6,7,8 மாணவர்களும் மேற்பிரிவில் தரம் 9,10,11 மாணவர்களும் அதி மேற்பிரிவில் தரம் 12,13 மாணவர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

இப்போட்டிகளில் கீழ் பிரிவுகளுக்கான பேச்சுப்போட்டியில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள், தமிழாய் வாழ்வோம்,ஒன்றே குலம் என்ற தலைப்புகளில் நடுவர்களால் வழங்கப்படும் ஒரு தலைப்பில் 5 நிமிடங்கள் பேசுதல் வேண்டும்.

மத்திய பிரிவிற்கான பேச்சுப் போட்டியில் தமிழுக்கு தொண்டாற்றிய சமயத் துறவியர், தமிழ் எங்கள் உயிருக்கு நேர், புதியதோர் உலகம் செய்வோம்,யாதும் ஊரே யாவரும் கேளிர் போன்ற தலைப்புகளில் போட்டியிடத்தில் நடுவர்களால் வழங்கப்படும் ஒரு தலைப்பில் 5 நிமிடங்கள் பேச்சு நிகழ்த்தப்பட வேண்டும்.

மத்திய பிரிவுக்கான கட்டுரைப் போட்டியில் தமிழ் வளர்ச்சியில் மேற்கு லகச் செல்வாக்கு தமிழாய்வுகளுக்கு வழிகாட்டிய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள், தமிழரும் கல்வியும், தமிழ் பண்பாட்டைப் பேணுவோம் ஆகிய தலைப்புகளில் நடுவர்களால் வழங்கப்படும் ஒரு தலைப்பில் 250 முதல் 300 சொற்களுக்குள் அமையுமாறு கட்டுரை வரைதல் வேண்டும்.

மேற்பிரிவு ,அதி மேற்பிரி வுகளுக்கான பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் தமிழ் மொழியும் இலக்கியமும், தமிழர் பண்பாடு, தமிழர் வாழ்வியல், தமிழரும் கல்வியும் போன்ற தலைப்புக்களில் நடுவர்களால் வழங்கப்படும் தலைப்புக்களில் ஒன்றை தெரிவுசெய்து போட்டியில்பங்கேற்கவேண்டும். பேச்சுப் போட்டியில் 5 நிமிடங்கள் பேச்சு நிகழ்த்துதல் வேண்டும். அத்துடன் பங்குபற்றுவர்களின் முன்னாயத்திற்காக 15 நிமிடங்கள்வழங்கப்படவுள்ளது.

கட்டுரைப் போட்டியில் 350தொடக்கம்400சொற்களுக்குள் அமையுமாறு கட்டுரை வரைதல் வேண்டும்.

கவிதைப் போட்டியில் ஒப்புவிக்கப்படும் கவிதை புதுக்கவிதையாகவோ அல்லதுமரபுக்கவிதையாகவோ அமைய முடியும் என்பதோடு 30 தொடக்கம் 40 வரையானஅடிகளில்அமைதல் வேண்டும்.

மேற்படி போட்டிகளுக்காக ஒரு பிரிவுக்கான ஒரு போட்டியில் ஒரு பாடசாலையிலிருந்து ஒருவர் மட்டுமே பங்கேற்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள்விண்ணப்பங்களை ஏ4 தாளில் தயாரித்து பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட இரு பிரதிகளை எதிர்வரும் 5 ஆம் திகதிக்குமுன்னர் இணைப்பாளர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா குழு, புனித பத்திரியாசிரியர் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரி க்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாவட்ட மட்டப் போட்டி களில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களிற்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கபட்டுள்ளது. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 160 | 120 |
| தக்காளி | 50 | 70 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 40 | 40 | 60 | 50 |
| கரட் | 100 | 100 | 130 | 120 |
| பூசணி | 70 | 60 | 60 | 60 |
| புடோல் | 60 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 70-80 | 60-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 | 90 |
| பாகற்காய் | 100 | 120 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 120 | 90 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 | -- |
| போஞ்சி | 100 | 100 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 90 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 50 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 100 | 120 | 90 |
| வெங்காயப்பூ | -- | 160 | 200 | -- |

# இராசி பலன்

*20.03.2013*
*(பங்குனி 07, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு*
*அட்டமி முற்பகல் 11.36 மணிவரை*
*திருவாதிரை பின்னிரவு 3.52 மணிவரை*
*இராகுகாலம் 12.17-1.47மணிவரை*
*சுபநேரம் 4.47-6.17 மணிவரை*
*நல்லைக்குருமணி குருபூசை,*
*அட்டமி -நவமி*

**மேடம்** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கலாம்,விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள்.

**இடபம்** வாய்ப்புக்கள் வாயிற்கதவைக் நெருங்கும், மாற்றினத்தவர் மகிழ்ச்சியான செய்திகளை கொண்டு வருவர், அலங்கார பொருட்கள் வாங்க முன் வருவீர்கள், குடும்ப நன்மையுண்டு.

**மிதுனம்** மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், காணாமல் போன பொருளொன்று கைக்கு கிடைக்கும், சிந்தனை மிகுதியான நாள்,போசன சுகமுண்டு.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தொழில்நலன் கருதி வெளியூர் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள்.

**சிங்கம்** வருமானம் வரும் வழியை கண்டு கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த கருமங்களில் முன்னேற்றம் ஏற்படும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்

**கன்னி** உதிரி வருமானங்கள் கைக்கு கிடைக்கலாம், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு.

**துலாம்** பொருளாதார நிலை உயர என்ன வழி என்று நினைப்பீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் நிமித்தம் புதிய வியூகம் அமைப்பீர்கள்.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், முயற்சிகள் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, கௌரவமான நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், நண்பர்கள் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**மகரம்** உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், தொழில் மேன்மையுண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உடல்நலம் சீராகும், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** வளர்ச்சி பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் இடம் பெறலாம், முன்னோர் சொத்துக்களால் ஆதாயமுண்டு, சுபசெய்திகள் வந்து சேரும் நாள்.

**மீனம்** தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், உறவினர் மூலம் ஏற்பட்ட தகராறுகள் அகலும், ரோக பயமுண்டு, எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயமடைந்திருந்தவரின் கையடக்கத் தொலைபேசி மாயம்

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியவரது உடைமைகள் விபத்து இடம்பெற்ற இடத்திலேயே திருடப்பட்ட சம்பவம் மாலுசந்திப் பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கரணவாய் குஞ்சு கடையை சேர்ந்த சேனாதிராஜா கிருஷ்ணராஜா (வயது36) என்பவரே விபத்தில் சிக்கி காயமடைந்ததோடு மேற்படி வழிப்பறிப்பிலும் பாதிக்கப்பட்டவராவார்.


இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

சம்பவதினத்தன்று குறித்த பிரஸ்தாப நபர் தொழிலை முடித்துக் கொண்டு மாலுசந்தி வீதி வழியாக தனது டிஸ்கவர் ரக மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி சென்றுள்ளார்.


இவர் மாடச்சந்தியை அண்மிக்கும் வழியில் சிற்றொழுங்கை ஒன்றிலிருந்து மாலுசந்தி வீதிக்கு ஏறிய சபரி மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பிரஸ்தாப நபரை மோதித்தள்ளியுள்ளனர்.

பின்னர் தரையில் விழுந்து காயமடைந்து நடக்க முடியாத நிலையிலிருந்தவரின் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசியினைபறித்துக் கொண்டு அவ்விடத்திலிருந்து தலைமறைவாகியுள்ளனர்.

இந்நிலையில் அருகில் நின்றவர்களின் உதவியுடன் வீடுபோய் சேர்ந்த பாதிக்கப்பட்டவர் நேற்று பொலிஸாரிடம் சம்பவம் குறித்து முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.(அ-5-60)




# மாதா சொரூபம் விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது



(யாழ்ப்பாணம்)

யாழ். மணியந்தோட்டம் இறங்குதுறைப் பகுதியில் வைக்கப்பட்டிருந்தவேளாங்கண்ணிமாதாசொரூபம் இனந்தெரியாதோரினால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இந்த மாதா சொரூபம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் கிராம சேவை அலுவலர் மற்றும் யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த மாதா சொரூபம் கடந்த கால யுத்தத்தின் போது அழிக்கப்பட்டிருந்தது.

பின்னர் அந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியேற்றப்பட்ட பின்னர் மீண்டும் மாதா சொரூபம் மக்களினால் வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-6)

# இந்திய வியாபாரிகளுக்கு பொலிஸார் வலைவீச்சு!

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் தங்கியிருக்கும் இந்திய புடைவை வியாபாரிகளை வலைவீசி இராணுவத்தினரும் பொலிஸாரும் தேடி வருகின்றனர்.

இந்தியா தமிழ் நாட்டில் இருந்து சுற்றுலா விசாவை பெற்று யாழ். மாவட்டத்திற்கு வந்த நூற்றுக்கணக்கான இந்தியா புடைவை வியாபாரிகள் அனுமதியின்றி வியாபாரம் செய்து வருவதாக இங்குள்ள வர்த்தக சங்கங்கள் அவர்களுடைய பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்தில் நெல்லியடி வர்த்தக சங்கத்தினர் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து கடந்த வியாழக்கிழமை நெல்லியடி நகரப்பகுதியில் வைத்து இந்திய வியாபார தம்பதியினர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இதேபோன்று மறு நாள் உடுப்பிட்டி பகுதியிலும் 3 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிசாரிடம் பாரப்படுத்தப்பட்டனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தம்முடன் 50 இற்கு மேற்பட்ட இந்திய தமிழ் வியாபாரிகள் வடமராட்சி பிரதேசங்களில் ஆங்காங்கே தங்கியிருந்து அனுமதிப்பத்திரம் இன்றி புடைவை வியாபாரம் மேற்கொண்டு வருவதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து அனுமதிப்பத்திரம் இன்றி புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் இந்திய வியாபாரிகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் கைது செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (அ-3-24)











யாழ்.மாவட்ட செயலக பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் நல்லூர் தியாகிகள் அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பினை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வின்போது மாவட்ட செயலகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எஸ். திருலிங்கநாதன், யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தின் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பாதுகாப்பு உதவியாளர் திருமதி காயத்திரி குமரன் ஆகியோர் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும் மகளிர் தினத்தில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)


## கார் விற்பனைக்கு

NISHAN SUNNY
N-16, Super salloon
Silvar colour
Manuval here
No: JJ XXXX
T.P.: 0774521392

(C-2745)







## தண்டல் ஒழுங்குகள்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர பொங்கலை முன்னிட்டு வழமையான கிராமங்களுக்கு ஆலய இலச்சினை பொறிக்கப்பட்ட உழவு இயந்திரங்களில் இன்றிலிருந்து (20.03.2013) வருகின்ற எங்கள் தொண்டர்களிடம் உங்களது நேர்த்திப் பொருட்களை வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

வேறு எவருக்கும் தண்டல்கள் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

- ஆலய பரிபாலனசபை,
கரைச்சி புளியம்பொக்கணை
நாகதம்பிரான் ஆலயம்.

(சி-2743)

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின்
அதிபர்
**திரு.பெ.பாலகிருஸ்ணன்**
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி**
**பெருமாள் தர்மாத்தா**

அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும்
'குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

பாடசாலை சமூகம்
மு/விசுவமடு மகா வித்தியாலயம், விசுவமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசகாணிகளில் மக்கள் வாழ்ந்துவந்ததை காணிஅமைச்சர் மறைக்க முயற்சிக்கிறார்

## வலி.வடக்கு தவிசாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**வலிகாமம் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டுள்ள 6 ஆயிரம் ஏக்கர் காணியில் மூவாயிரம் ஏக்கர் காணி அரச காணி என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கூறியது பச்சைப் பொய் என தெரிவித்த வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன் அரச காணிகளில் மக்களை குடியேற்றியதை மறைப்பதற்கு அமைச்சர் முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.**

கடந்த 12 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் மாவட்ட அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றினை நடத்திய அமைச்சர் ஜனக பண் டார தென்னக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார், அத்தோடு வலி. வடக்கு மக்கள் அரசாங்கத்திற்கு காணிவழங்க முன்வந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இதுதவிர வலி. வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின்கீழுள்ள 6 ஆயிரம் ஏக்கர் காணியில் மூவாயிரம் ஏக்கர் காணி அரசாங்க காணி எனவும் மிகுதி 3 ஆயிரம் ஏக்கர் காணி மட்டுமே தனியாருக்குச் சொந்தமானது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதுதவிர பலாலியின் பாதுகாப்புக்காக காணிகளை நட்டஈடு கொடுத்து சுவீகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் கருத்துக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு சார்பாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகிறது.

இந்நிலையில்அமைச்சரின்கருத்துபிழையான தகவல்களை அடிப்படையாக கொண் டது எனக் குறிப்பிட்ட வலி. வடக்கு தவிசாளர் 3 ஆயிரம் ஏக்கர் அரச காணி எனக்கூறி வலி. வடக்கில் அரச காணியில் மக்களை குடியேற்றியதை அமைச்சர் மறைக்கப்பார்க்கின்றார் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

வலி. வடக்கிற்குட்பட்ட பலாலி, கீரிமலை, தெல்லிப்பழை போன்ற சுமார் 6 இடங்களில் உள்ள அரச காணிகளில் மக்கள் முன்பு குடியேற்றப்பட்டிருந்தனர் எனவும் குறிப்பிட்டார் இதேவேளை வலி. வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பொதுமக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதோடு அவர் களின் வீடுகள் இடித்து அழிக்கப்படுவதாக பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆனால் இது தொடர்பில் தெல்லிப்பழை பிரதேச செயலரிடமோ, தன்னிடமோ இது வரை எந்தவிதமான முறைப்பாடுகளும் வரவில்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு வலி. வடக்குப் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள்ள பொது மக்களின் வீடுகளை இராணுவத்தினர் இடித்து அழிப்பதாக இதுவரையில் எந்த வித மான முறைப்பாடுகளும் கிடைக்கப் பெறவில்லை.

தெல்லிப்பழை முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அண்மையாகவுள்ள சுமார் மூன்று வீடுகளும் கீரிமலை பகுதியில் கடற்படை முகாமிற்கு அருகிலுள்ள வீடுகள் சிலவும் இராணுவத்தினரால் இடிக்கப்படுவதாக பிரதேசசபை உறுப்பினர்களினால் குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் தனக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை என அரசஅதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை வலி. வடக்கில் இராணு வத்தினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க ஆங்கில நாளேடுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கட்டளைத் தளபதி ஆகியோரின் கருத்துக்கள் இணையத்தளத்தில் செய்திகளாக பிரசுரமாகியிருந்தன.

இவ்வாறு வலி. வடக்கு காணி விவகாரம் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (அ-6)

## ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக திரைப்பட இயக்குநர்களும் உண்ணாவிரதம்

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக திரைப்பட இயக்குநர்கள் உண்ணாவிரதம் பங்கேற்றுள்ளனர்.

இலங்கை அரசு மீது பொருளாதார தடை விதிக்க வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்திய அரசு உடனே நடைமுறைப்படுத்த வேண்டும்.



இலங்கை ஜனாதிபதியை சுதந்திரமான சர்வதேச நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தவேண்டும்.

தமிழ் ஈழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும். அதற்கு வசதியாக ஈழ தமிழர் பகுதிகளில் திணிக்கப்பட்டிருக்கும் சிங்கள குடியேற்றத்தை உடனே வெளி யேற்ற இலங்கையை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இயக்குநர்கள் சங்கம் நேற்று காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் நடத்தியுள்ளனர்.

இந்த உண்ணாவிரதத்தில் திரையுலகைச் சேர்ந்த மற்றைய சங்கங்களும் பங் கேற்றுள்ளன. உண்ணாவிரதத்தில் இசையமைப்பாளர் இளையராஜாவும் பங் கேற்றுள்ளார்.

அப்போது அவர் பேசு கையில், அரசியலுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. நான் அரசியல் பேச முடி யாது. மனிதா பிமான முறையில கலை ஞர்கள் இருக் கும் உண் ணா விரதத்திற்கு ஆதரவு கொடு க்க வந்து ள்ளேன் என்றார்.

இதேவேளை உண்ணாவிரதப் போராட்டத்தில் சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கமும் பங்கேற்றுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சங்க தலைவர் ஆர். ராதிகா சரத்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை தமிழர்களு க்கு ஆதரவாக அவர்களின் வாழ் வுரிமையை மீட்டெடு க்க ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் அமெரிக்கா கொ ண்டு வரும் தீர்மானத்த்தை இந்திய அரசு நிச்சயமாக ஆதரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறு த்தி, தமிழ் திரைப்பட இயக் குநர்கள் சங்கம் சார்பில் நே று ஒரு நாள் உண்ண ாவிரத போராட்டம் நடைபெற்றது.

மனிதாபிமானத்தோடு நடைபெற இருக்கும் இந்த போராட்டத்தில், தமிழ்நாடு சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சங்கமும் கலந்து கொண்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் இன்னல் நீங்கிட, அவர்களின் கண்ணீரை துடைத்திட ஆதரவு கரம் நீட்ட வேண்டும் என்று அனைத்து சின்னத்திரை தயாரிப்பாளர்களையும் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் ராதிகா சரத்குமார் கூறியுள்ளார். (அ-2)

## புண்ணியக் கிராம விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஸ்ரீ துரவடிப்பிள்ளையார் ஆலயத்தினரும் இணைந்து நடாத்தும் புண்ணியக் கிராம விழா எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை கிழக்கு கோப்ர் குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ துரவடிப்பிள்ளையார் ஆலயத் தில் இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்க ராஜசர்மா அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பி. செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினர்களாக கிராம சேவை உத்தியோகத்தர் ம. ஞானேந்திரன், அரியாலை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் வல்லிபுரம் ஸ்ரீகணேசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)

## பிரதமராகும் எண்ணம் எனக்கு கிடையாது-பசில்

பிரதமர் ஆகும் திட்டம் கிடையாது என பொருளாதாரஅபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியை பெற்றுக்கொள்ள வேண்டுமென கற்பனை செய்து கூட பார்க்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் பதவி குறித்து பேச வேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் ஏற்கனவே பிரதமர் ஒருவர் பதவி வகித்து வருவதாகவும் இதனால் பிரதமர் பதவி குறித்து கவலைப்பட வேண்டியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமராகுவது குறித்து நினைத்துக் கூட பார்க்காத காரணத்தினால் இந்த விடயம் பற்றி பேச வேண்டியதில்லை என பசில் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். (அ-2)


ஆயுர்வேத வைத்தியர்கள், மக்களின் கவனத்திற்கு!



* நீங்கள் இளநரை, முடி உதிர்வு, வாதம், கை, கால் விறைப்பு, மூட்டுவலி, முதுகு வலி, இடுப்பு வலி என்பவற்றால் அவதிப் படுகின்றீர்களா?
* இந்நோய்களுக்குப் பலவழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா?
* இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் எம்மிடம் உண்டு

ஆயுர்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு

* எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்டு இருமல் போன்ற பல வகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆசவங்கள், குவாதங்கள், சூரணங்கள், சிரப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



C - 2744

நீங்கள் நாட வேண்டிய இடம்

சிவா நறுமணப் பூங்கா
இல - 288, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பேசி - 021 222 2567



சிவபூசை செய்யக்கூடிய சைவத் துறவிகள் தேவை

தீவகத்தில் சிவாலயம் ஒன்றில் தங்கியிருந்து பூசை வழிபாடு செய்யக்கூடிய சைவத் துறவிகள் தேவை.

ஒன்றுக்கு மேற்பட்ட துறவிகள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் துறவறசபை அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளும் வழங்கப்படும்.

பொருத்தமானோர் தொலைபேசி இலக்கம் (இருப்பின்)

விளம்பர இல:- C-2732
மே/பா: வலம்புரி
இல 3, 2-ம் ஒழுங்கை.
பிறவுண் வீதி,


எனும் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும்.

- ஆலய நிர்வாக சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியின் கபடநாடகம் ஒருபோதும் இங்கு பலிக்காது

## முதலமைச்சர் ஜெயா அறிக்கை



(சென்னை)

**இலங்கைத் தமிழர்கள் முதுகில் குத்தும் நடவடிக்கையாகவே தி.மு.க.தலைவர் கருணாநிதியின் இந்த அறிவிப்பு அமைந்துள்ளது. இவரின் இதுபோன்ற எண்ணற்ற நாடகங்களை மக்கள் கண்டு அலுத்துப்போயுள்ளனர். மீண்டும் கொண்டுவரப்பட்ட டெசோ அமைப்பிற்கு மக்களிடமும் மாணவர்களிடமுமிருந்து எந்தவித ஆதரவும் இல்லாத நிலையில் தற்போது அரங்கேற்றியுள்ள இந்த நாடகத்தின்மூலம் தன்மீது ஏற்பட்டுள்ள நீங்காத பழியை குறைத்துக்கொள்ளலாம் என எண்ணுகின்றார் என தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.**

கருணாநிதியின் பதவிவிலகல் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தன்னலத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவதில் தனக்கு நிகர் யாருமில்லை என்பதை தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்றையதினம் பத்திரிகையாளர் சந்திப்பின்மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இன்று (நேற்று) பத்திரிகையாளர்களைச் சந்தித்த தி.மு.க.தலைவர் கருணாநிதி அமெரிக்காவின் வரைவு தீர்மானத்தை பெருமளவிற்கு நீர்த்துப்போக விட்டதோடு தி.மு.க. முன்மொழிந்த திருத்தங்கள் எவற்றையும் இந்திய அரசு சிறிதும் பரிசீலனையும் செய்யவில்லை.

எனவே ஈழத்தமிழருக்கு எந்த வகையிலும் பயன்படாத சூழ்நிலைகளே உருவாக்கப்பட்டுள்ள நிலையில் இதற்குப் பின்பும் இந்திய மத்திய ஆட்சியில் தி.மு.க. நீடிப்பது தமிழினத்திற்கே இழைக்கப்படும் பெரும் தீமை என்பதால் தி.மு.க.மத்திய அமைச்சரவையிலிருந்தும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்தும் உடனடியாக விலகிக்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்ற பழமொழியைத்தான் நினைவுபடுத்துகிறது.

2009ஆம் ஆண்டு இலங்கையில் உச்சக்கட்டப்போர் நடந்தபோது மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சிப்பொறுப்பில் இருந்தவர் கருணாநிதி. அப்போது மத்திய அமைச்சரவையிலிருந்து விலகவோ மத்திய அமைச்சரவைக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்ளவோ நடவடிக்கை எடுக்காமல் மூன்று மணிநேர உண்ணாவிரத நாடகம் நடத்தி தமிழர்களை ஏமாற்றியவர் கருணாநிதி.

இந்தச் சமயத்தில் கருணாநிதி மத்திய அமைச்சரவைக்கு அளித்திருந்த ஆதரவை விலக்கிக்கொண்டிருந்தால் இலங்கைத் தமிழர்கள் காப்பாற்றப்பட்டு இருப்பார்கள். இதைக் கருணாநிதி செய்யவில்லை. இது தமிழர்களுக்கு எதிரான மிகப்பெரிய துரோகம்.

இதைத் தான் செய்யவில்லை என்றாலும் இலங்கைக்கு எதிராக மத்திய அரசு ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் கொண்டு வந்து போர்க்குற்றவாளிகளை தண்டிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்றும் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் எனது தலைமையிலான அரசு கொண்டு வந்த தீர்மானத்தின் மீது நடவடிக்கை எடுக்கவாவது மத்திய அரசை வலியுறுத்தியிருக்க வேண்டும். இதையும் கருணாநிதி செய்யவில்லை. இது கருணாநிதி இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இழைத்த இரண்டாவது துரோகம்.

கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைக்குழுக்கூட்டத்தில் அமெரிக்காவின் சார்பில் கொண்டு வரப்பட்ட ஓரளவு வலுவான தீர்மானத்தை இந்திய அரசு வலுவி ழக்கச் செய்த போதாவது கருணாநிதி அதனைக் கண்டித்து இருக்கவேண்டும். கருணாநிதி இதிலும் தான் ஏமாற்றப்பட்டதாக சொல்லிக் கொள்ளலாம்.

ஆனால் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை வலுவிழக்கச் செய்ததே இந்தியாதான் என்று பட்டவர்த்தனமாக அனைவருக்கும் மத்திய அரசே பாரத பிரதமரின் கடிதத்தை வெளியிட்டு தெரியப்படுத்தியது.

அப்போதும் கருணாநிதி அதைப்பற்றி வாய் திறக்கவில்லை. இது இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான கருணாநிதியின் மூன்றாவது துரோகம்.

ஒருவேளை அவ்வாறு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நீர்த்துப்போக செய்த சூழ்ச்சியில் கருணாநிதிக்கும் பங்கு உள்ளது போலும். எனவேதான் அதைப்பற்றி அப்போது அவர் எதையும் சொல்லவில்லை என்றுதான் நினைக்கத்தோன்றுகிறது.

இவ்வாறு மத்தியஅரசை எதிர்த்து வலிமையாக குரல் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை எல்லாம் நழுவவிட்டு இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள சொல்லொ ணாத் துயரங்களுக்கு எல்லாம் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டிய கருணாநிதி தன்னுடைய பொறுப்பிலிருந்து நழுவும் வகையில் தமிழக மக்களை ஏமாற்றும் வகையில் பதவி விலகுகிறாரா?

இது மட்டுமல்லாமல்இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுள்ள தீர்மானம் தொடர்பாக இந்தியா அமைதி காத்து வருவது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்றும் இப்பிரச்சினையில் இந்தியா வலுவான வரலாற்று சிறப்பு மிக்க உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தை வலுவடையச் செய்ய என்னென்ன மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் என்றும் நான் விரிவான கடிதம் ஒன்றை பாரதப் பிரதமருக்கு நேற்று முன்தினம் எழுதியுள்ளேன்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஏ.கே. அந்தோனி, ப.சிதம்பரம், குலாம் நபி ஆசாத் ஆகியோர் சந்தித்ததும் கருணாநிதி அளித்த பேட்டியில் இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை போர்க்குற்றங்கள் என்றும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான படுகொலைகள் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் இந்தத் திருத்தங்கள் அடங்கிய தீர்மானத்தை இந்திய நாடாளுமன்றத்திலும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் தான் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராகவும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் வலுவான தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டால்தான் இலங்கைக்கு எதிராக வலுவான நடவடிக்கை எடுக்க இயலும்.

ஆனால் கருணாநிதி இந்திய நாடாளுமன்றத்தில் இதைப்போன்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

அவரது இன்றைய (நேற்று) பேட்டிக்கு பின் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பிய போது நாளைவரை இருப்பதாகவும் அதற்குள் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் தி.மு.க. தனது முடிவை மறுபரிசீலனை செய்யும் என்றும் கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக இந்திய நாடாளுமன்றத்தில தீர்மானம் நிறைவேற்றுவது என்பது தற்போதைய சூழ்நிலையில் உறுதியான பயனளிக்கக் கூடியது அல்ல.மாறாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் தான், தீர்மானங்களுக்கு திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும். அதுவும் உடனடியாக கொண்டு வரப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் இந்திய அரசை காலம் கடக்க வைத்து,இலங்கைத் தமிழர்கள் முதுகில் குத்தும் நடவடிக்கையாகவே தி.மு.க. தலைவர் கருணாநிதியின் இந்த அறிவிப்பு அமைந்துள்ளது.

தி.மு.க.தலைவர் கருணாநிதியின் இதுபோன்ற எண்ணற்ற நாடகங்களை மக்கள் கண்டு அலுத்துப் போயுள்ளனர்.மீண்டும் கொண்டு வரப்பட்ட டெசோ அமைப்பிற்கு மக்களிடமும் மாணவர்களிடமும் எந்தவித ஆதரவும் இல்லாத நிலையில் தற்போது அரங்கேற்றியுள்ள நாடகத்தின் மூலம் தன் மீது ஏற்பட்டுள்ள நீங்காத பழியை குறைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் நிறைவேறாது.

இந்த கபட நாடகங்களுக்கு தமிழக மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர் என்பது திண் ணம். இவ்வாறு ஜெயலலிதா தனது அறிக் கையில் கூறியுள்ளார். (அ-2)

## முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி சிங்கள மக்களை பாதிக்கவில்லை

### *புள்ளி விபர திணைக்களம் தகவல்*

முஸ்லிம் மக்களின் சனத்தொகை வளர்ச்சியானது சிங்கள மக்களை பாதிக்கவில்லை என இலங்கை புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் சனப்பரம்பல் பிரிவின் பணிப்பாளர் இந்து பண்டார தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு குடிசன மதீப்பீட்டின் அடிப்படையில் 74.9 வீதமானவர்கள் சிங்களவர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

1981 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 74 வீதமாகக் காணப்பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 1981 ஆம் ஆண்டில் 7 வீதமாக காணப்பட்ட முஸ்லிம் சனத்தொகை தற்போது 9.2 வீதமாக உயர் வடைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம் மக்களின் சனத்தொகை மாற்றம் சிங்கள மக்களின் சனத்தொகை மாற்றத்தில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் 1981 ஆம் ஆண்டு 12.7 வீத இலங்கைத் தமிழர்களும் 5.5 வீத இந்திய வம்சாவளித் தமிழர்களும் காணப்படுவதாக வும் 2011 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 11.2 வீதமாகவும் இந்திய தமிழர்களின் எண்ணிக்கை 4.2 வீதமாகவும் அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மாநகர எல்லைப் பகுதியில் சிங்கள மக்களை விடவும் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்து வருவதாக வெளியான தகவல்களிலும் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்றைய தினம் வடமாகாண பிரதம செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் உள்ளிட்டவர்கள் வடமாகாண உயர் அதிகாரிகள் கொண்ட யூ.என்.எயிட் நிறுவனப் பிரதிநிதிகள் கொண்ட குழுவினருடன் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக எம்.பிக்களே பதவி துறந்து மத்திய அரசுக்கு பாடம் புகட்டுங்கள்

## தமிழக மக்கள் முன்னேற்ற கழகம்

இலங்கை பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு பாடம் புகட்ட தமிழகத்தை சேர்ந்த அனைத்து எம்.பி.க்களும் தங்களது பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான்பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது சர்வதேச விசாரணை நடத்தி அவரை போர்க்குற்றவாளியாக அறிவித்து கைது செய்ய வேண்டும். தமிழர்களின் போராட்டத்தை அவமதிக்காமல் ஐ.நா. சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் திருச்சி மத்திய பஸ் நிலையம், காதி கிராப்ட் அருகே அரை நிர்வாண போராட்டம் நடந்தது.

போராட்டத்தில் பங்கேற்ற அனைவரும் மேல்சட்டையை கழற்றி மத்திய அரசு மற்றும் இலங்கை அரசிற்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

இதையடுத்து தமிழக மக்கள் முன்னேற்றகழகதலைவர்ஜான்பாண்டியன் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுக்க ஐ.நா. சபையில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று கோரி தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். ஆனாலும் மத்திய அரசு வாய்மூடி மௌனம் காத்து வருகிறது. இதற்கு காரணம் தமிழகத்தில் போராட்டம் ஒன்றுபட்டு இல்லாமல் பிளவுபட்டு நிற்பது தான்.

அ.தி.மு.க ,தி.மு.க உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் அரசியலுக்கு அப்பாற்பட்ட இந்த பிரச்சினையில் ஓரணியில் திரள வேண்டும்.

மாணவர்களின் போராட்டத்துக்கு நாம் அனைவரும் தமிழர்கள் என்ற அடிப்படையில் ஆதரவு தெரிவிக்க வேண்டும். இலங்கை பிரச்சினையில் மத்திய அரசுக்கு பாடம் புகட்ட தமிழகத்தை சேர்ந்த அனைத்து எம்.பிக்களும் தங்களது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

மாணவர்களின் போராட்டத்தை தமிழக அரசு ஒடுக்கக்கூடாது. 7 கோடி தமிழர்களும் ஒன்று திரண்டு மாணவர்களுடன் சேர்ந்து போராட வேண்டும். அப்போதுதான் இலங்கையில் உள்ள தமிழ் இனத்தை காப்பாற்ற முடியும்.

ஐ.நா. சபையில் வாக்கெடுப்பு நடைபெற உள்ள 21 ஆம் திகதிக்கு முன்பாக தமிழகத்தில் அனைத்து தமிழர்களின் சார்பிலும் பொது பந்த் நடத்தப்பட வேண்டும்.

இலங்கை தான் செய்த போர்க் குற்றங்களை மறைப்பதற்காக தமிழக மீனவர்களை கைது செய்து சிறையில் அடைத்து வருகிறது. இதுவும் இந்திய அரசு சொல்லிக் கொடுத்து நடத்தப்படும் நாடகம் ஆகும். இதனை தமிழக மீனவர்களும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

## பூநகரி கோட்ட தமிழ் தினவிழா

(பூநகரி)

பூநகரி கோட்ட மட்டத்திலான தமிழ்த்தினவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை பூநகரி நல்லூர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கோட்டக்கல்விப்பணிப்பாளர் என்.தருமரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

மேடைநிகழ்வுகள்தவிர்ந்தஏனைய தமிழ் மொழித்தின போட்டிகள் யாவும் நாளை வியாழக்கிழமை பூநகரி ம.வி.யில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

எனவே பூநகரி கோட்ட பாடசாலைகளில் இருந்து போட்டிகளில் பங்கேற்றும் மாணவர்களை அன்றைய தினம் இறுதி தெரிவாக இருப்பதால் தவறாது சமுகம் தருமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-84)



பூநகரி ஞானிமடம் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வினையும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

## மத்திய கிழக்கிலிருந்து நாடு திரும்பியோர் சிகிச்சை பெறுங்கள்

### சுகாதார அமைச்சு அறிவுறுத்து

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இலங்கை திரும்பி இருக்கும் எவருக்காவது சுவாசத் தொகுதியோடு தொடர்புடைய நோய்கள் காணப்படுமாயின் அவர்கள் தாமதியாவது சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சின் நோய் பரப்புதல் தடுப்புப் பிரிவின் பிரதம நோய் பரவுதல் தடுப்பு நிபுணர் பபா பலிகவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மத்திய கிழக்கு நாடுகளில் புது வகை வைரஸ் ஒன்று இனம் காணப்பட்டது. அதுவே கொரனோ வைரஸ் ஆகும். இவ் வைரஸ் தாக்கம் கடந்த வருடம் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் இற்றைவரை 14 பேருக்கு இவ் வைரஸ் தொற்றியுள்ளது.

அவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்றாலும் இந்நோய்க்கு இலங்கையர் எவருமே இற்றை வரை உள்ளாகவில்லை.

ஆயினும் இலட்சக்கணக்கான இலங்கையர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிகின்றனர். அதனால் நாம் விழிப்பாக இருப்பது அவசியம்.

இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளாகின்றவர்களுக்குக் காய்ச்சல், மூச்செடுப்பதில் சிரமம், இருமல் போன்ற சுவாசத் தொகுதியோடு தொடர்புடைய உபாதைகளை அவதானிக்க முடியும். ஆயினும் உரிய சிகிச்சையைப் பெறுவதன் மூலம் இந்நோயைக் குணப்படுத்தி விடலாம்.

இவ்வைரஸ் தொற்றுக்குள்ளானவர் தும்மும் போதும் இருமும் போதும் வெளியாகும் சளித்துகள்கள் மூலம் இவ்வைரஸ் வெளிப்பட்டு அடுத்தவர்களுக்கு சுவாசத்தின் மூலம் தொற்றும் என்றாலும் இது கிலிகொள்ளக்கூடிய நோய் அல்ல என்றும் அவர் கூறினார். (அ-2)

## மெய்வல்லுநர் போட்டி

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இடம்பெறவுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார். இதற்கமைய இப்போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் எதிர்வரும் 23 ஆம் திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் 11,13,15,17,19,21 ஆகிய வயதுப்பிரிவுகளின் ஆண், பெண் போட்டியாளர்களை கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# அக விடுதலை பெறுவோம்; இயேசுவின் மன்னிப்பை பெறுவோம்



உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் எனும் வேதாகமப் பகுதி இன்று எமக்கு தரப்படுகிறது. இப்பகுதியில் இயேசுவுக்கும் யூதர்களுக்கும் இடையே விடுதலை அடிமைத்தன்மை பற்றிய் காரசாரமான உரையாடல் நடப்பதை நாம் பார்க்கின்றோம். உண்மை என்பது இரண்டு பொருள்பட வேதாகமத்தில் காணப்படுகின்றது. சொல்லில், சிந்தனையில், செயற்பாட்டில், நேர்மை, வாய்மையை இதனையே உண்மை என்று அறிவோம். நமது பேச்சிலும் செயலிலும் மனநிலையிலும் நாம் உண்மை உள்ளவர்களாக இருந்தால் நாம் எந்தவித குற்ற உணர்வும் இன்றி அக விடுதலை அடைந்தவர்களாக வாழலாம். இவ்வாறு உண்மை நமக்கு விடுதலை அளிக்கிறது.

இயேசு தான் உண்மை என்பது மற்றைய பொருள். நானே வழியும் ஒளியும் உண்மையும் என்றார் இயேசு. இயேசுவே உண்மை. எனவே இயேசு நமக்கு விடுதலை தருகிறார். இந்த விடுதலை உடல் உள்ள ஆன்மா தழுவிய முழு விடுதலை. அகவிடுதலை மற்றும் புற விடுதலை இணைந்த ஒரு விடுதலை. இந்த விடு தலை அடைவதற்கு நாம் உண்மை உள்ளவர்களாக இருக்கவேண்டும். அந்த உண்மையை அவர்களது வார்த்தைகள் வாரி வழங்குகின்றன.

வரலாற்று உண்மையை விட ஆன்மீக இறைபியல் உண்மை ஒன்றும் உண்டு. யூதர்களுடன் சேர்ந்து நாமும் மறந்து விட்டோம். எனவே தான் இயேசு அதனை நினைவூட்டுகிறார். பாவம் செய்யும் எவரும் பாவத்துக்கு அடிமை என்று அந்த பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அளிக்கவே தாம் இந்த உலகிற்கு வந்தார் என்பதையும் எடுத்துக் காட்டு கிறார்.


ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

இயேசு வழங்குகின்ற விடுதலை பாவத்திலிருந்தும் சாவிலிருந்தும் நமக்கு கிடைக்கின்ற விடுதலை கத்தோலிக்கத்தின் படி இவ்வுலகில் நிலவுகின்ற எல்லா அடிமைத்தனங்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் அட்டூழியங்களுக்கும் மூலகாரணம் பாவமே. இதற்கு முக்கிய ஊற்றாக இருப்பது நம் சுய நலம் ஆகும். இயேசு இந்த இழி நிலையிலிருந்து நமக்கு விடுதலை தர வருகின்றார். இன்று நாம் பல பாவங்களுக்கும் பழக்கங்களுக்கும் செல்வத்துக்கும் சிலைகளுக்கும் நாம் அடிமைகளாய் வாழ்ந்து வருகிறோம். இந்த உண்மையை அறிக்கையிட்டு இயேசுவின் மன்னிப்பையும் விடுதலையும் பெற்றுக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெரிய இடத்து விருந்து




ஒரு கிராமத்தில் ஒரு பணக்கார ஜமீன்தாரர் இருந்தார். அவர் மிக்வும் கர்வம் பிடித்தவர். அந்தக் கிராமத்தில் பெரும்பாலும் விவசாயிகளும் கூலிவேலை பார்ப்பவர்களுமே இருந்தனர். அதனால் கிராமத்தில் உள்ள மக்களை அவர் மதிப்பதேயில்லை. அவர் கிட்ட நெருங்கிச் சென்று பேசக்கூட அவர் யாரையும் அனுமதிப்பதில்லை. அந்தக் கிராமத்தினர் யாவரும் ஜமீன்தாரரிடமிருந்து தள்ளி வெகுதூரத்தில் நின்று தான் பேசவேண்டும்.

ஒருநாள் அந்தக் கிராமத்தில் விவசாயிகள் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். ஒருவன் நான் நினைத்தால் ஜமீன்தாரரை அவர் வீட்டில் சாப்பிடுவதற்கு என்னை அழைக்கும்படி செய்ய முடியும் என்று பெருமையாக பேசினான்.

உடனே மற்றவர்கள் சரி நீ மட்டும் சொன்னபடி செய்து காட்டிவிட்டால் உனக்கு நாங்கள் எல்லோரும் சேர்ந்து அறுபது சேர் தானியங்களும் ஒரு ஜோடி காளை மாடுகளும் தருகிறோம் என்று சவால் விட்டனர். விவசாயியும் ஜமீன்தாரரைக் காணச்சென்றான்.

விவ சாயியைக் கண்டதும் நீ என்ன நல்ல விடயம் எனக்குச் சொல்லப்போகிறாய் என்றார் ஜமீன்தாரர்.

ஐயா அதைத் தனிமையில் தான் சொல்லமுடியும் என்று விவசாயி தயங்கவே ஜமீன்தாரர் மற்றவர்களை வெளியே போகச் சொன்னார். பின் அவனைச் சொல்லும்படி கேட்க விவசாயி, ஐயா, ஒரு குதிரை சுமக்கும் அளவுள்ள தங்கம் என்ன விலை இருக்கும்? என்று கேட்டான்.

அது தெரிந்து உனக்கு என்ன ஆக வேண்டும்? என்று ஜமீன்தாரர் கேட்க ஐயா, அது மிக முக்கியமான விடயம். தெரிந்தால் சொல்லுங்கள் மிக அவசரம் என்றான்.

ஓகோ இவனுக்கு நிறைய தங்கம் கிடைத்துள்ளது போலும் என்று எண்ணியஎ ஜமீன்தாரர் மிகுந்த ஆர்வத்துடன் சற்று விளக்கமாகச் சொல் என்றார். எனக்குப் பசிக்கிறது.


வீட்டுக்குப் போய் சாப்பிட்டு விட்டு பின்பு வந்து உங்களைப் பார்க்கிறேன் என்று புறப்பட்டான். தன் ஆர்வத்தை அடக்கமுடியாமல் நீ இங்கேயே சாப்பிட்டு விட்டு எனக்கு விளக்கமாகச் சொல் என்றார்.

அதன்படியே விவசாயி அவர் வீட்டில் வயிறார சாப்பிட்டான். சாப்பிட்டவுடன் அவனை உடனே வரச் சொன்ன ஜமீன்தாரர் இப்போது சொல் உன்னிடம் எவ்வளவு தங்கம் இருக்கிறது? என்றார்.

அதற்கு விவசாயி தங்கமா? என்னிடம் ஏது தங்கம்? எனக்கு அறுபது சேர் தானியம் ஒரு ஜோடி காளை மாடுகளும் கிடைக்க இருக்கின்றன.

அவற்றின் மதிப்பு ஒரு குதிரை சுமக்கும் அளவுள்ள தங்கத்தின் மதிப்பு இருக்குமா? என்று அப்பாவி போல் நடித்தான்.

முட்டாள் இத்தனைநேரம் என்னுடன் விளையாடினாயா? யாரங்கே! இவனைக் கழுத்தைப்பிடித்து வெளியே



தள்ளுங்கள் என்று சீறினார் ஜமீன்தாரர்.

விவசாயி உடனே வெளியே ஓடிவந்து விட்டான். எப்படியோ தான்போட்ட பந்தயத்தில் வென்றதால் அறுபது சேர் தானியம் ஒரு ஜோடி காளைமாடுகளும் பெறப் புறப்பட்டான்.

# அம்புலிமாமா கதைகள்

## சுரேகாவின் சாமர்த்தியம்


சுரேகா அவளது பெற்றோர்களுடைய ஒரே மகள். ஐந்து வயதே நிரம்பியிருந்த சுரேகா மிகவும் குறும்புக்காரி. ஓரிரவு நேரம் சுரேகாவின் அம்மா அவளைக் கூப்பிட்டு சுரேகா வீட்டின் கொல்லைப்புறத்திலிருந்து துடைப்பத்தைச் சற்று எடுத்துக் கொண்டு வாயேன் என்றாள். கொல்லைப்பக்கம் ஒரே இருட்டாக உள்ளது. இருட்டு என்றால் எனக்கு பயம் அம்மா என்று சுரேகா பதில் அளித்தாள்.

இருட்டைக்கண்டு ஏன் பயப்படுகிறாய்? அங்கு விநாயகர் உனக்குத் துணையிருப்பார். நீ பயப்படாமல் சென்று எடுத்து வா என்றாள் அம்மா. உண்மையாகவே விநாயகர் அங்கே இருக்கிறாரா? என்று கேட்டாள் சுரேகா.

ஆமாம் குழந்தை. அங்கு மட்டுமில்லை. எங்கும் இருக்கிறார். அவரிடம் பிரார்த்தனை செய்தால் அவர் உனக்குக் கட்டாயம் உதவி செய்வார் என்றாள் அம்மா.

சிறிது நேரம் யோசித்த

சுரேகா பின்பு மெதுவாகக் கொல்லைப்புறம் வாசல் கதவு வரை சென்றாள். பின்பு தன் கைகளை விரித்து நீட்டிக் கொண்டு விநாயகரே நீங்கள் உண்மையிலேயே இங்கிருந்தால் தயவு செய்து அந்தத் துடைப்பத்தை எடுத்து என் கையில் கொடுத்து விடுங்கள் என்றாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

77

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



அன்னைக்கு ராத்திரி.

கட்டாகிப்போச்சு கரண்ட்டு. இருட்டுக்குள்ள முடங்கிக் கெடக்கு ஊரு. சத்தத்தத் தொடச்சு வெளிய போட்டுட்டு இப்ப நான் மட்டும்தான் இருக்கேன்னு சொல்லுது இருட்டு. இருட்டை எதுத்து என்னால நிக்க முடியலையேன்னு அழுதுக்கிட்டிருக்கு கருத்தமாயி வீட்டு லாந்தரு.

பச்சப் பனங்கிழங்கு மேல மஞ்சளத் தடவிக்கிட்டிருக்கா தகப்பனும் மகனும். கிழங்கை அவிக்க மஞ்சட்டிய வச்சு அடுப்பு மூட்டிக்கிட்டிருக்கா சிட்டம்மா. வெளிச்சமும் இருட்டும் கலந்தடிக்கிற மகன் மூஞ்சியையே பாத்துக்கிட்டிருக்காரு கருத்தமாயி.

"வெளிநாடு போக எல்லா சாங்கியமும் முடிஞ்சிருச்சா மகனே?"

"எல்லாம் முடிச்சாச்சப்பா விசா மட்டும்தான் வரணும்; நாளைக்கு வந்துரும்"

"அதென்னப்பா விசா?"

"நீ சொந்த நாட்டைவிட்டுப் போகலாம்ங்கறதுக்கு அனுமதிதான் பாஸ்போர்ட்டு. எங்க நாட்டுக்குள்ள நீ வரலாம்ங்கிற அனுமதிதான் விசா"

"அதுக்கொரு அனுமதியா? கொக்கு, நாரை, குருவியெல்லாம் விசா வாங்கியா வெளிநாடு போயிட்டு வருதுக? மனுசன்தான் கெட்டசாதிப்பய போல இருக்கு. ஒத்தனையும் நம்பி உள்ள விடமுடியல"

தகப்பனும் மகனும் மஞ்ச பூசி வச்ச பனங்கிழங்கை அள்ளி மஞ்சட்டியில மொத்தமாக் கொட்டுனா சிட்டம்மா; சீமைக் கருவேல முள்ளுத் தள்ளி அடுப்பெரிக்க ஆரம்பிச்சா.

தள்ளி உக்காந்திருந்த மகன்கிட்ட நகந்து நகந்து வந்தாரு கருத்தமாயி. அவன் தலைக்குள்ள கையவிட்டு அஞ்சு விரலையும் குடுமிக்குள்ள அழுத்துனாரு. அப்பன் செல்லம் கொஞ்சறது தலையிலயிருந்து கால் வரைக்கும் புரியுது மகனுக்கு. என்னமோ சொல்ல வாராருன்னு அவரு அழுத்துன அழத்து ஒரு குறி காட்டுது.

"சின்னப்பாண்டி... இந்த ரெண்டு நாளா நெஞ்ச என்னமோ கவ்வுதுரா மகனே"

"என்னப்பா சொல்ற? பஞ்சாயத்துக்குப் பயப்படறியா?"

"அதெல்லாம் ஒரு கவலையில்லப்பா எனக்கு. விடிஞ்சு எந்திருச்சா மனுசனுக்கு அவன் பொழப்புல ஒரு உப்பு உறைப்பு இருக்கணுமா இல்லையா? உங்கண்ணன் இல்லாட்டி எம் பொழப்புல உப்பு ஏது? உறைப்பு ஏது? ஒரு வருசத்துக்கு நான் பெத்த மகன் மூஞ்சி காணாம அலையப் போறனே... அத நெனைச்சுத்தான் மகனே நெஞ்சுக்கூட்டுல நிம்மதி செத்துப்போச்சு"

அப்பன் தலையில வச்ச கைய எடுத்து நெஞ்சுல வச்சு அழுத்திக்கிட்டான் சின்னப்பாண்டி.

"ஒரு வருஷம்தான்... கண்ணு மூடிக் கண்ணு முழிக்குமுன்ன ஓடிப் போயிருமப்பா"

"ஒரு வருசம் கழிச்சாவது வந்து சேந்திரமாட்டியா?"

"நிச்சயம் வந்திருவனப்பா"

"சத்தியம் பண்ணிக் கொடு"

"எதுக்குச் சத்தியம்?"

"என் தலையில அடிடா மகனே. தண்ணி புழங்க மாட்டேன்- சீரெட்டுக் குடிக்க மாட்டேன்- சில்லரை விளையாட்டு விளையாட மாட்டேன். சொல்லி அடி என் உச்சந்தலையில"

"ஏப்பா என் மேல நம்பிக்கையில்லையா?"

"உம்மேல இருக்கப்பா. ஊரு மேல நம்பிக்கை இல்ல"

"சரிப்பா சத்தியம். நீ சொன்ன மூணையும் தொடமாட்டனப்பா?"

அவன் நெஞ்சுல வச்ச கைய உருவி



மகன் கன்னத்தையே தடவிக்கிட்டிருந்தாரு கொஞ்சநேரமா.

சிட்டம்மா அடுப்புல போட்ட கிழங்கு வெந்து மலந்து போச்சு. எறக்கி வைக்குமுன்ன உப்புக் கல்ல அள்ளி உள்ள எறிசா. அவிச்ச கிழங்க சொளகுல கொட்டி ஆறவச்சுத் தட்டுல எடுத்துப் போட்டுக் கொண்டாந்து வச்சா.

பனங்கிழங்க உரிச்சு உரிச்சு அப்பனுக்குக் கொடுத்துக்கிட்டே சின்னப்பாண்டி சொல்றான்:

"யப்பா... நீங்க மூணு சொன்னீக. நான் முணையும் கேட்டுக்கிட்டேன். நான் ரெண்டு சொல்லுவேன்; ரெண்டையும் கேட்டுக்கிருவிகளா?"

"சொல்லு மகனே"

"என் உசுரைக் கொடுத்து இந்த ஊரை ஒரு மாதிரிக்கிராமமா மாத்தி வச்சிருக்கேன். அதுக்குள்ள நாய்நரி புகுந்துறாமப் பாத்துக்கிருவீகளா? நீங்கதான் காவல் காக்கணும். மகன் விட்ட இடத்த அப்பன் கொண்டு செலுத்துவீகளா?"

"நான் விட்டத நீ செய்யணும்; நீ விட்டத நான் செய்யணும். செய்யிறண்டா சின்னப்பாண்டி"

"இன்னொண்ணும் சொல்லப் போறேன்; கேப்பீகளா?"

"மொதல்ல சொல்லு"

"நான் வெளிநாடு போறத நெனச்சா நெஞ்சக் கவ்வுதுன்னு சொன்னீகளே... ஏன் தெரியுமா?"

"ஏன்"ங்கிற மாதிரி ஒரு பார்வை பாத்தாரு கருத்தமாயி.

"நான் போயிட்டா இந்த வீட்டுல நீங்க தனி ஆளா ஆயிருவீங்க. பேச்சுத் துணைக்கு ஆளிருக்காது உங்களுக்கு. ஆடு, மாடு, கன்னுக்குட்டி, நாயி, பூனை, நரின்னு ஏகப்பட்ட பேச்சுத் துணை இருக்கு எங்காத்தாளுக்கு. நீங்க என்ன பண்ணுவீக? மோட்டுவளையப் பாத்துக்கிட்டே எத்தனை நேரம் மூச்சு விடுவீக? பிள்ளை குட்டிக பக்கத்துலயே இருந்தனால, சைகையிலயும் சாடை மாடையிலுமா முப்பத்தோரு வருஷம் முடிஞ்சுபோச்சு உங்க காலம். இப்பக் கடைசி ஆளு நானும் போகப் போறேன். இனி எப்படிக் காலம் தள்ளுவீக? அதனால..."

# "சத்தியம் பண்ணிக் கொடு"

"அதனால...?" உரிச்ச கிழங்கை வாயில மென்னு அதக்கிக்கிட்டே கண்ணை உருட்டி உருட்டி மகனைப் பாத்தாரு கருத்தமாயி.

"அப்பன் ஆத்தா ரெண்டுபேரும் என் கண்ணு முன்னால பேசணும். ரெண்டு பேரும் கூடிப்பேசி என்னிய வழியனுப்பி வைக்கணும். என்னிய உங்க புள்ள்ளையாப் பெத்தீக. நான் பேசி நீங்க கேட்டிருக்கீக. நீங்க பேசி நான் கேட்டதில்ல. பேசுங்கப்பா. பேசாததாய்தகப்பன்கூட வாழறது ஒரு பிள்ளைக்கு எவ்வளவு கொடுமை தெரியுமா? அப்பன் ஆத்தா சிரிச்சுப் பேசறதப் பாக்க ஒரு பிள்ளைக்கு ஆசை இருக்காதா? என் நெஞ்சுல ஒரு பாராங்கல்லக் கட்டியே இத்தனை வருஷம் வளத்துட்டீங்களேப்பா. கண்காணா தேசம் போகப்போறன். இப்பவாவது என் பாரத்தை எறக்கி வையுங்கப்பா"

மளார்னு அப்பன் மடியில விழுந்து சின்னப்பையன் மாதிரி கதறி அழுகிறான் சின்னப்பாண்டி. என்னமோ ஏதோன்னு அடுப்பை விட்டு ஓடி வாரா சிட்டம்மா.

"வெளியூரு போற புள்ளைக்கு தைரியம் சொல்லி அனுப்பாம இப்படிக் கண்ணீரும் கம்பலையுமா அனுப்பக்கூடாதுன்னு சொல்லிவையி பூனைக்குட்டி"

விளக்கமாத்தை எடுத்து பூனை மேல ஒரு போடு பேட்டா சிட்டம்மா.

மடியில கெடந்த மகனத் தூக்கிக் கண்ணத் துடைச்சாரு கருத்தமாயி.

"ஏலே ராசா.... இதென்னடா வம்பாப்போச்சு. என் மேல ஏதாச்சும் தப்பு இருக்கா? பேசமாட்டேன்னு முறுக்கி நிக்கிறது நானா? ஒரு புடிவாதக்காரிகிட்ட என் பொழைப்பு அழிஞ்சு போச்சு. பேச வேண்டிய காலத்துல பேசல; இனிப் பேசி என்ன ஆகப்போகுது?"

"உனக்காக நான் பேசிப் பாக்கிறேன் மகனே. அவளைத் திருப்பிப் பேசச் சொல்லு"

அப்பனும் கூடவே அழுது தேத்தவும் ஆத்தா மேல சீறி விழுந்துட்டான் சின்னப்பாண்டி.

"இல்லாத பழிக்காக எங்கப்பனை இத்தன வருஷம் கொன்டு குலைய அத்துட்டியே கெழவி. நான் ஊருக்குப் போறதுக்குள்ள நீங்க ரெண்டு பேரும் பேசல... நான் ஊருக்கே போக மாட்டேன்; ஆமா"

"ஏலே சின்னப்பயலே... உனக்கென்னடா தெரியும்? நான் அத்துக்கிட்டுப்போகாம இத்தன வருஷம் ஊரு மேஞ்ச ஆளோட உலை வச்சதே பெருசு. இந்தா இந்தான்னு முடிஞ்சு போச்சு பொழப்பு. இனிப் பேசுன்னா என்னா பேசாட்டி என்னா?"

ஒரு இழுவையான பேச்சுப்பேசி இன்னும் ரெண்டு பனங்கிழங்கை எடுத்துவச்சுட்டு உள்ள போயிட்டா சிட்டம்மா.

"உன் ஏக்கம் எனக்குத் தெரியுமுடா தங்கம். நீ எதையும் மனசுல வச்சுக்கிராத. நம்ம குலசாமி கூடவே வரும். போயிட்டு வா. ஒண்ணு சொல்றேன். கேட்டுக்கடா மகனே... ஒரே வீட்டுல பேச்சுவார்த்தையோட பிரிஞ்சு பொழைக்கிறத விட பேச்சுவார்த்தை இல்லாம ஒண்ணா இருக்கிறது பெருசில்லையா? விடு- விதி விட்ட வழி ஆகட்டும்"

அழுத மகனத் தூக்கி நிமித்தித் தோள்ல சாச்சுக்கிட்டாரு. அழுக்கு வேட்டிய எடுத்துக் கண்ணத் தொடச்சு விட்டாரு. தேஞ்சுபோன லாந்தர்ல திருகிவிட்டாரு திரிய.

மகன் திங்காம வச்சிருந்த பனங்கிழங்க இழுத்தாரு பக்கத்துல.

"எடுத்துக்கடா மகனே... கெழங்க எடுத்துக்க"

அவன் கண்ணைத் தொடச்சுக்கிட்டு அப்பனுக்காக ஒரு கிழங்கை எடுத்து உரிச்சான்.

பாவம்... அவன் கிழங்கு வேகல.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நடைபெற்றுள்ள முன்னேற்றம் போதுமானதல்ல

## அமெ.செய்தி தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட்

(கொழும்பு)

சர்வதேச சமுதாயத்திற்கு அளித்த வாக் குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறை வேற்ற வேண்டும். இதுவரை இலங்கையில் நடைபெற்றுள்ள முன்னேற்றங்கள் போது மானவை அல்ல. இவ்வாறு அமெரிக்க வெளி யுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விக் டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார்.

வோஷிங்டனில் வைத்து நேற்று முன் தினம் அமெரிக்காவின் வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட் கூறுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் போருக்கு பிந்திய முன் னேற்றப் பணிகளில் நிலவிவரும் பின்ன டைவைப் பற்றி கவலை கொண்டுள்ள நாடுகளுடன் அமெரிக்காவும் இணைந்து ள்ளது.

எங்களது செயற்பாடு இலங்கைக்கு ஆச்சரியத்தை தராது. ஏனெனில் எங்கள் நிலைப்பாட்டை தெளிவாகவும் வெளிப்படை யாகவும் தனிப்பட்ட முறையிலும் நாங்கள் ஏற்கனவே இலங்கைக்கு தெரிவித்துவிட் டோம்.

இலங்கை அரசு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே எங்கள் தீர்மானத்தின் மீது நாங்கள் தெளிவாக உள் ளோம். நாங்கள் முன்வைத்துள்ள தீர்மான த்திற்கு பலத்த ஆதரவை எதிர்பார்க்கின் றோம்.

சென்ற ஆண்டு இலங்கையின் வெளி யுறவு துறை மந்திரி அமெரிக்கா வந்திருந்த போது இலங்கையில் முன்னேற்றம் ஏதும் ஏற்படாவிட்டால் நாங்கள் ஒருபடி மேலே செல்ல வேண்டியிருக்கும் என அப்போ தைய வெளியுறவுத்துறை செயலாளர் ஹிலாரி கிளின்டன் இலங்கை மந்திரியிடம் தெளிவு படுத்தியிருந்தார். தற்போது நாங்கள் அதையேதான் செய்துள்ளோம்.

சர்வதேச சமுதாயத்திற்கு அளித்த வாக் குறுதிகளை இலங்கை அரசு நிறை வேற்ற வேண்டும். அவை நிறை வேற்றப்படாததால் இதுவரை இலங்கையில் நடைபெற்றுள்ள முன்னேற்றங்கள் போதுமானவை அல்ல என்பதை ஐ.நா. மனிதவுரிமைகள் மன்றத் தில் அமெரிக்கா தீர்மானமாக முன்வைத் துள்ளது என்றார். (அ-2)

# தமிழக போராட்டங்கள் மும்முரம்

# இலங்கை நிறுவனங்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழ கமும் கொந்தளித்துள்ளதால் தமிழகத்திலு ள்ள இலங்கையுடன் தொடர்புடைய நிறுவ னங்கள் மற்றும் அமைப்புக்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் வேண்டுகோளுக்க மையவே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய ப்பட்டுள்ளன. இலங்கைத் தூதரக அதிகாரி யொருவர் இந்தத் தகவலை உறுதிப்படுத்தி னார்.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும். தனி ஈழத்துக்கு பொதுவாக்கெடு ப்பு அவசியம் என்பவை உட்பட 8 அம்சக் கோரிக்கையை முன்வைத்து தமிழக மாண வர்கள் ஆரம்பித்துள்ள போராட்டம் தற்போது தீவிரமடைந்து வருகிறது.

மாணவர் சமூகத்துக்கு ஆதரவாக மனித வுரிமை அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகி யோரும் ஆர்ப்பாட்டக் களத்தில் குதித்துள்ள மையால் ஈழ ஆதரவுச் செயற்பாடுகள் என்று மில்லாத வகையில் தமிழகமெங்கும் அதிக ரித்துள்ளன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை தமி ழக தஞ்சாவூர் கோவிலுக்குச் சென்றிருந்த இலங்கை பௌத்த பிக்குமீது தாக்குதல் நடத் தப்பட்டது. இந்தச் சம்பவத்தையடுத்து தமிழ கத்தினுள் இலங்கையுடன் தொடர்புடைய நிறுவனங்கள், அமைப்புக்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே அவற்றுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை ஐந்து நாட்களுக்கு மேலாக ஓயாது தொடரும் மாணவர் போராட்டத்தால் தமிழகத்தில் இயல்பு நிலை பெரிதும் பாதிக்க ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



நெடுந்தீவை சேர்ந்த யக்கரியாஸ் தேவதாஸ் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எ.எ. ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் அண்மையில் செய்து கொண்டார்.

இவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியும் இந்தியா மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் பாடத்தில் முதுகலை பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தற்போது கொழும்பு கொட்டாஞ்சேனை தேசிய சேமிப்பு வங்கியில் அதிகாரமளிக்கப்பட்ட மேற்பார்வை உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார். (அ)

# ஈழத் தமிழர்களுக்காக வியாபாரிகளும் களத்தில்

இலங்கை தமிழர் பிரச்சினையில் போர் குற்றவாளியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை கண்டித்து தமிழ் நாடு தழுவிய போராட்டத்தில் தற்போது வியாபாரிகளும் இறங்கி உள்ளனர்.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் உள்ள வியாபாரிகள் இலங்கை தமிழர்களு க்கு ஆதரவாக நேற்றையதினம் கடைய டைப்பு போராட்டம் நடத்தியுள்ளனர்.

அதன் படி காலையில் சந்தையில் உள்ள அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. சன நாட்டமின்றி மார்க்கெட் வெறிச்சோடி கிடந்தது. வெளியூர்களில் இருந்து காய்கறி, பழம், பூ ஏற்றி வரும் லொறிகளும் அன்றைய தினம் நிறுத்தப்பட்டு விட்டது.

வியாபாரிகள் கடையடைப்பு போராட்டம் குறித்து மார்க்கெட்டில் பல இடங்களில் நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தது. கடையடைப்பில் ஈடு பட்ட வியாபாரிகள் பழ மார்க்கெட் அருகே ஒன்று திரண்டு கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தினர். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவைக் கண்டித்து வியாபாரிகள் ஆவேச மாக முழக்கமிட்டனர். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# தாமரை

**Botanical Name-**
***Nelumbium sbeciosum***
**Family-Nymphaeceae**
**Engl- Lotus**

பூக்கும் இருவித்திலைத் தாவரம், நன்னீர் கொடி, குளம், குட்டை, பொய்கை முதலிய நன்னீர் நிலைகளில் வளரும். இதில் நிறத் தால் வேறுபட்ட செந்தாமரையும் வெண் தாமரையும் உண்டு. இலை வட்டவடிவமா னது.(2-3 அடி), இலைக்காம்பு 3-6 அடி



நீளமானது. அகவிதழ்கள் செந்நிறமாக இருப்பின் செந்தாமரை எனவும் இவை வெண்ணிறமாக இருப்பின் வெண்டாமரை எனவும் கூறப்படும், நீண்ட முள் நிறைந்த மலர் காம்புகளில் மூகை உண்டாகும். மலர் அகன்றது. வட்டவடிமாகத் தோன்றும். பூத்த மலர் மிக அழகானது. நறுமணம் உள்ளது. இதன் விதைகளானது சுடலை விதை போன்றது. சூலகத்தை நிறைத்துக் கொண்டு வளரும் விதையின் புறவுறை பஞ்சு போன்றது. இத னுள் சதைப்பற்றான இருவித்திலைகள் காண ப்படும். முளைக் குருத்து மடிந்திருக்கும்.

மருத்துவ பயன்கள்-

✷ வெண்தாமரை இதழ்களை எடுத்து நிழலில் நன்றாக உலர்த்தி பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனை உயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் 1-2 கிராமை வெந்நீரில் உள்ளெடுக்கலாம்.மேலும் இது இருதயத்தையும் பலப்படுத்துகின்றது.

குறிப்பு

வெண்தாமரை குள த்தில் பூக்கும் காலங்க ளிலே பூ இதழ்களை சேக ரித்து உலர்த்தி பொடி த்து வைக்கலாம்.

✷தாமரைப்பூ, ஆவ ரம்பூ, செம்பருத்திப்பூ மூன்றையும் சம அளவு எடுத்து தண்ணீரில் போட்டுத் காய்ச்சிக் குடி த்து வந்தால் இருதய நோய் குணமாகும்.


✷தாமரை விதை பருப்பை வெந்நீரில் அரை த்து சாப்பிட்டால் விக்கல் மறையும்.

✷ தாமரை இலைச்சாறு எடுத்து அதில் பனங்கற்கண்டைக் கலந்து தண்ணீர் (ஒரு டம்ளர்) ஊற்றி [illegible] காய்ச்சி 40 நாட்கள் குடித்து வந்தால் [illegible].

✷தாமரை இலை, விஷ்ணு கிராந்தி இலை தலா ஒரு கைபிடி எடுத்து நன்றாக அரைத்து மாதவிலக்கான 2 ஆம்நாளில் பாலில் கல ந்து குடித்து விட்டு திராட்சைப்பழம்(20) சாப்பி டவும். இப்படி தொடர்ந்து ஏழு நாட்களுக்குச் சாப்பிட்டால் கர்ப்ப வாயு, சூதக வாயு, வயிற்று வலி நீங்கி கரு உண்டாகும்.

✷தாமரைப் பூவின் மகரந்தப் பூவின் மகரந் தப் பொடியும் தேன் சேர்த்து ஒருகிராம் அளவு காலையில் சாப்பிட்டு வந்தால் உடல் பலம் அதிகரிக்கும்.

✷ வாத நோய் உள்ளவர்கள் தாமரைக் குளத்து நீரில் குளித்தல் அல்லது அதனால் மூட்டுக் களை கழுவி வர குணமாகும்.




✷ தாமரை இலையில் நாம் உணவை புசிக்கும் போது உடல் வெப்பம் தணிக்கப்பட்டு உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

✷வளரும் சிறார்களுக்கு இன்றைய கால கட்டங்களில் பெற்றோர் இயற்கை பழவ கைகளை கொடுக்க தவறிவிடுகின்றனர். இங்கு தாமரையின் விதைகளை தனியே யும் உண்ணக் கொடுக்கலாம். இல்லாவிடின் விதைகளை பொடித்து பாலுடன் கொடுத் தால் உடல் பலமடையும். நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

✷ இன்றைய காலகட்டங்களில் ஒரு சில சந்தைகளில் தாமரைக் கிழங்குகள் விற்கப் படுகின்றன. இதனை உண்டு வந்தால் மூல வியாதிகள், சரும ரோகங்கள் குணமாவ துடன் உடல் பலம் பெறுகிறது.

இதன் பூவிதழ்களை பொடித்து வைத்துக் கொண்டு 400மில்லி நீருக்கு 150 கிராம் சீனி சேர்த்து கரைத்து அடுப் பேற்றி காய்ச்சி மணம் வரும் பதத்தில் பொடியில் 100 கிராம் சேர்த்து கிண்டி தேன் 50 மில்லி சேர்த்து லேகியமாக கிண்டி எடுத்து வைத்துக் கொள்ள வேண் டும். 5கிராம் அளவு காலை, மாலை சாப்பிட இருதயம் பலப்படும். உடல் வன்மை அதிகரிக்கும். இதழ்களை பொடி த்து பசுவின் பால் (காய்ச் சாத பாலில் )கல ந்து முகத்தில் பூசி வர முகப் பருக்கள் மறையும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி மாநாட்டை விரைவில் நடத்துங்கள்

## ரணில் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் சர்வ கட்சி மாநாட்டை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு கூட்ட சர்வ தேச அழுத்தங்களில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டு மென எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசி யக் கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசி ங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டு நடத்திய ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத் துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

இலங்கைக்கு எதிராக நாளையதினம் வெளி யாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தீர்மானத்திற்கு முன்னர் அரசாங் கம் சர்வகட்சி மாநாட்டை நடத்தி சர்வதேச அழுத்தத்தில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டும்.

இந்நிலையில் எமது நாட்டை லிபியா வைப் போலவோ அல்லது சிரியாவைப் போலவோ வருவதற்கு எம்மால் அனுமதிக்க முடியாது.

இதேவேளை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்த வேண் டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# அரசாங்கத்தை பாதுகாக்க ரணில் முயற்சிக்கின்றார்

## சுரேஷ் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தை பாதுகாக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க செயற்படுகின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டினார்.

அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணை க்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அனைத்து கட்சிக் குழுக்கூட்டத்தினை கூட்ட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான எதிர ணிக்கூட்டணி அறிக்கை வெளியிட்டுள் ளது.

அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது.

இவ்வளவு காலம் எதிர்க்கட்சித் தலைவர் எங்கிருந்தார் என்பது தெரியவில்லை. இவ் வாறாக இவர் கோரியுள்ளமை அரசாங் கத் தைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஈடுபடு கின்றாரா என்ற கேள்வியை எழுப்பியுள் ளது.

இதேபோல் ஜெனீவா கூட்டம் நடைபெற்று வரும் வேளையில் வேற்றுமையில் ஒற்றுமை எனும் தலைப்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் உள்ளடங்கிய கருத் தரங்கொன்றும் கொழும்பில் நடத்தப்பட் டுள்ளமையும் கவனிக்கத்தக்கது என மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# வலுவிழந்தோருக்கான விளையாட்டுக்கழகம்



கன்டிக்கப் இன்டநஷனல் அமைப்பினால் வவுனியா மாவட்டத்தில் வலுவிழந்தோருக்கான விளையாட்டுக்கழகமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அனைவருக்கும் விளையாட்டு எனும் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் விளையாட்டுக் கழகம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டத்துடன் அதற்கான கோவை விதிகளும் உருவாக்கப்பட்டது.

இதன்போது பல்வேறு வகையிலும் விசேட தேவையுடையோர் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளை தெரிவு செய்திருந்தனர். வவுனியா புலேஸ் பல்மோரல் ஹோட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா மாவட்ட உதவிப் பணிப் பாளர் எஸ்.எம்.சிசிர செனவிரத்ன, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஐ.சுவானி, கன்டிக்கப் நிறுவனத்தின் அனைவருக்கும் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் ஸ்டீவ் ஜாட்நெட், சமூக் ஒருங்கிணைப்பாளர் எஸ். மயூரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (அ-266-250)

# சிவில் சமூகத்திற்கு பூரண ஒத்துழைப்பு

## அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

இலங்கையின் சிவில் சமூகத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த 60 ஆண்டுகளாக இலங்கை சிவில் சமூகத்திற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழ ங்கி வந்துள்ளதாக அந்நாட்டுக்கான இலங் கைத் தூதுவர் மிச்சல் சீசன் தெரிவித்துள் ளார்.

இலங்கையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டு இரண்டு வாரங்களில் செயலமர்வு ஒன்றில் கலந்து கொண்டேன். அமெரிக்கா வினால் இந்த செயலமர்வு ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது.

சிங்கள சிறுமியொருவர் வடக்கில் நடை பெறும் இந்த செயலமர்வில் பங்கேற்க வேண் டாம் என தமது பெற்றோர் குறிப்பிட்டதாக எமது தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்தி ருந்தார்.

செயலமர்வின் இடைநடுவில் தனது பாதணி அறுந்ததாகவும் அதன் போது புத்தளத்தைச் சேர்ந்த தமிழ் சிறுமி ஒருவர் தனது பாத ணிகளை வழங்கியதாக தமது தாயிடம் தெரி வித்ததாக அந்தச் சிறுமி குறிப்பிட்டார்.

இது ஓர் சாதாரண விடயம் என்றே தோன் றும். எனினும் அனைத்து இன நல்லிணக்கம் இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் உலக நாடுகளின் சிவில் சமூகங்களை வலுப்படுத்தும் செயன்முறை க்கு அமெரிக்கா உதவிகளை வழங்கி வரு கின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தி.மு.க. விலகுவதால் மத்திய அரசாங்கத்துக்கு ஆபத்தில்லை

## காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவையிலிருந்து விலகுவோம் என்ற தி.மு.கவின் அச்சுறுத்தலால், மத்திய அரசுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது குறித்து டில்லியில் செய்தியாளர் களிடம் நேற்று முன்தினம் இரவு பேசிய காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ரஷீத் ஆல்வி, தி.மு.க வுடன் எந்த கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அது தீர்க்கப்படும் என நம்பு வதாகவும் இலங்கைக்கு எதிரான தீர்மான விவகாரத்தில் தமிழர்களின் நலனை கருத்தில் கொண்டே மத்திய அரசு முடிவெடுக்கும் என் றும் தெரிவித்தார். மேலும் அமைச்சரவை யில் இருந்து விலகுவோம் என்ற தி.மு.கவின் அச்சுறுத்தலால் மத்திய அரசுக்கு எந்த ஆப த்தும் இல்லை என்று கூறிய ஆல்வி அரசு நிலை யாக உள்ளது என்றும் ஐந்தாண்டு பதவிக் காலத்தை முழுமையாக முடிக்கும் என்றும் உறுதி தெரிவித்தார்.

இதற்கிடையே இலங்கை தமிழர் விவ காரம் தமிழகத்தில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளதால் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இலங்கை யுடனான இராணுவ ஒத்துழைப்பு தொடர் பான செயலாளர்கள் மட்டத்திலான பேச்சு வார்த்தையை மத்திய அரசு இரத்து செய்துள் ளது. (அ-2)

# தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வருவோரை தடுத்து நிறுத்துக

## அமைச்சர் ரணவக்க தெரிவிப்பு

இலங்கையர் தென்னிந்தியாவில் தாக்கப் படும் விடயத்தை தீவிரமான விடயமாக கரு தப்பட வேண்டும் என்றும் தென்னிந்தியாவில் இருந்து இல்ங்கைக்கு வருவோரை இலங் கை தடைசெய்ய வேண்டும் எனவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் தென்னிந்தியாவுக்கு செல்லும் இலங்கையர்களை அங்கு செல்ல வேண்டாம் என்று இலங்கை அரசாங்கம் அறிவுரை கூற வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இதேவேளை இந்தியாவில் இலங்கை யர்களுக்கும் அவர்களின் உடைமைக ளுக் கும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என் றும் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலா ளர் கருணாதிலக்க அமுனுகம இந் தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இல்ங்கையில் இருந்து தென்னிந்தியா வுக்கு செல்லும் அடியவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை தஞ்சா வூரில் பௌத்த பிக்கு தாக்கப்பட்டமை மற்றும் நேற்றுமுன்தினம் சென்னையில் பௌத்த பிக்கு ஒருவர் தாக்கப்பட்டமை குறித்து உத்தி யோகபூர்வமாக முறையிடப்பட்டுள்ளதாக அமுனுகம குறிப்பிட்டுள்ளார். (அ-2)



வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டி அண்மையில் அல்வாய் மனோகரா விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தை பெற்று சம்பியனாகியபருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியினரையும் இரண்டாம் இடத்தை பெற்ற பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான குற்றச்சாட்டுகளை இந்தியாவும் பகிர்ந்து கொள்ளவேண்டும்

**தற்போது ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 வது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பதுவே, இந்தியா, முன்பு தான் விட்ட தவறுகளிலிருந்து தன்னை மீட்பதற்கான நல்ல சந்தர்ப்பமாக அமையும் என்று அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றில் அரசறிவியல் துறை பேராசிரியராக பணியாற்றும் சங்கரன் கிருஷ்ணா *ஹின்டுஸ்தான் ரைம்ஸ்* ஊடகத்தில் தெரிவித்துள்ளார்-அவரது பத்தி இங்கே தரப்பட்டுள்ளது**

இலங்கையில் யுத்தம் முடிவடைந்த போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் இளைய மகனான 12 வயதான சிறுவன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்ட வேளையில் எடுக்கப்பட்ட ஒளிப் படங்கள் அப்போது இலங்கைப் படையினரால் பல பத்தாயிரங்கள் வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கான சாட்சியமாக காணப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இவ்வாறான குற்றச்சாட்டுக்களை இந்தியாவும் பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்திரா காந்தி காலத்தில் அதாவது 1980- களில் இந்தியா தனது சொந்த பூகோள அரசியல் நலன்கள் முதன்மைப்படுத்தப்பட்டாலும் பின்னர் ராஜீவ் காந்தி காலத்தில் விரும்பப்படாத தரகு வேலை செய்ததன் மூலமும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் பாரிய வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டது.

இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாமீது அழுத்தம் கொடுப்பதை நோக்காகக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட பல தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சிகளை வழ்கியது. 1987 இல் உருவாக்கப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையானது தமிழீழ விடுதலைப்புலிகளையோ அல்லது பெரும்பான்மை சிங்கள மக்களையோ மகிழ்ச்சிப் படுத்தவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் யுத்தம் புரிவதற்காக இந்திய அமைதி காக்கும்படை இலங்கைக்கு அனுப்பப்பட்டதன் விளைவாக அங்கே 1200 வரையான இந்திய வீரர்கள் தமது உயிர்களை இழக்கவேண்டி ஏற்பட்டது. இராஜதந்திர ரீதியான அழுத்தத்தை வழங்குவதற்காக தீவிரவாதிகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கிய மூலோபாயமானது 1991 மே 21 புலிகள் அமைப்பால் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதன் பின்னால் கடும் கண்டனத்திற்கு உள்ளானது.


1990களின் ஆரம்பத்தில் இந்தியர்களாகிய நாம் பெற்றுக்கொண்ட இவ்வாறான கசப்பான அனுபவங்களின் விளைவாக இலங்கையின் விடயத்தில் தலையிடாது விலகியிருந்தோம். 2001-ல் அமெரிக்கா மீது அல்குவைதா மேற்கொண்ட தாக்குதல்களின் பின்னர் அரசியல் அபிலாசைகளுக்காக போராடும் சிறுபான்மையினருக்கும் பயங்கரவாதத்திற்கும் இடையிலான இடைவெளி தொடர்பில் தெளிவின்மையை ஏற்படுத்தியது. இந்நிலையில் இலங்கையில் அந்நாட்டு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையில் தொடரப்பட்ட யுத்தத்திற்கிடையில் அகப்பட்ட சிறுபான்மைத் தமிழ் மக்கள் பல பத்தாயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர்.

போர் வெற்றிகொள்ளப்பட வேண்டும் என்பது முதன்மைப்படுத்தப்பட்டமை மற்றும் சீனா பாகிஸ்தான், ரஸ்யா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் "மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் உதவியுடன் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மே 2009-ல் போரை முடிவுக்கு கொண்டு வந்தார். இலங்கையின்,போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது, தமிழ் மக்கள் செறிவாக இருந்த பகுதிகள் மீதும், வைத்தியசாலைகள் மீதும் இலங்கை அரசாங்கப் படைகள் பரந்தளவில் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதுடன், இந்த மக்களுக்கான அடிப்படை மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் தடை விதித்ததாக ஐ.நா. மனித உரிமைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டில் சட்ட ஆட்சி நிலை நிறுத்தப்படுவதுடன், போர்குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக பொறுப்பளிக்க வேண்டும் எனவும், அதிகாரப் பரவலாக்கல் மற்றும் மீளிணக்கப்பாடு தொடர்பாகவும் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்த போதும் இலங்கை அரசாங்கமானது இன்னமும் இவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுக்கவில்லை. இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாக சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் ஏப்ரல் 2011 இல் ஐ.நா. வல்லுனர் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பின் 18வது திருத்தச் சட்டத்தின் 17வதுபத்தியில் நிறைவேற்று ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன. முன்னர், மோசடி, மனித உரிமைகள், தேர்தல்கள், காவற்றுறை மற்றும் நீதிச்சேவைகள் போன்றவற்றுக்கான சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல் அல்லது விலக்குதல் போன்றவற்றை அரசியல் யாப்பு சபையே மேற்கொள்ள முடியும். ஆனால், தற்போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசியல் சீர்திருத்தத்தின் கீழ், இவ்வாறான சுயாதீன ஆணைக் குழுக்களை நிறைவேற்று அதிகாரமுள்ள நாட்டின் ஜனாதிபதி நியமிக்க அல்லது பதவியிலிருந்து நீக்க முடியும்.





ராஜபக்சாக்கள் தற்போது இலங்கையை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ளனர். இலங்கை ஜனாதிபதியின் சகோதரர் ஒருவர் பாதுகாப்புச்சபை செயலாளராகவும், பிறிதொரு சகோதரர் பொருளா தார அபிவிருத்தி அமைச்சராகவும் மற்றொருவர் நாடாளுமன்ற சபாநாயகராகவும் பதவி வகிக்கின்றனர். இவர்கள் மூவரும் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 70 சதவீதத்திற்கும் அதிகமானதை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ளனர்.



இலங்கையின் வடக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மக்களின் சொந்த நிலங்களை ஆக்கிரமித்துள்ளதால் ஒரு இலட்சத்தற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். போர்ச் சுற்றுலாப் பயணிகளாக தற்போது தென்னிலங்கையர்கள் வடக்கு நோக்கிப் பயணிக்கின்றனர். தமிழ் மக்களுக்கான அரசியற் செயற்பாடுகள் நசுக்கப்பட்டுள்ளன. வடக்கில் வாழும் மக்களின் அன்றாட வாழ்வு பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகிவருகின்றது.



இந்தியாவின் பிரதிபலிப்புகள் முரண்பாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. 2012 இல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மீளிணக்காப்பாடு தொடர்பில் அமெரிக்கா தீர்மானம் முன்வைத்தபோது அதனை இந்தியா ஆதரித்தது. இதனை சீனா எதிர்த்தது. இலங்கைக்கு சார்பாக சீனா தனது வாக்கை வழங்கியது. இந்தியா இந்த விடயத்தில் வெறுமனே வாளாதிருந்து, சிறிலங்கா மீதான போர்க் குற்றச்சாட்டு விசாரணைகளுக்கு தனது அழுத்தத்தை வழங்காதிருந்திருந்தால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் நசுக்கப்பட்டிருப்பார்கள்.





தற்போது ஜெனீவாவில் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22வது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைக்கவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பதன் மூலம் அது, தான் விட்ட தவறுகளிலிருந்து தன்னை மீட்பதற்கான ஒரு வாய்ப்பாக அமையும்.

இலங்கை அரசாங்கமானது தனது நாட்டில் வாழும் சிறுபான்மை தமிழ் மக்களை சமமாகவும் முழு உரிமையும் கொடுத்தும் கவனிக்க வேண்டும். என்பதுடன், கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டு, போரின்போது இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பாரபட்சமற்ற அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் தொடர்பில் அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளுடன் இணைந்து நாமும் (இந்தியாவும்) இலங்கை மீது அழுத்தம் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடல் பகுதியில் பறந்த அவுஸ்திரேலிய உளவு விமானம்

## ஈரான் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக் கடற்பகுதியில் பறந்த அவுஸ்திரேலிய உளவு விமானத்திற்கு ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானிய யுத்தக் கப்பலொன்று இலங்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்ததாக அந்நாட்டு உயர் கடற்படை அதிகாரி சிவாஷ் ஜராஹ் தெரிவித்துள்ளார்.

இந்த யுத்தக் கப்பலை வீடியோ படம் எடுக்க அவுஸ்திரேலிய உளவு விமானம் முயற்சித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது குறித்த உளவு விமானத்திற்கு கடுமையாக எச்சரிக்கை விடுத்து வேறு திசையில் பயணிக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக்கடுமையான எச்சரிக்கையைத் தொடர்ந்து குறித்தவிமானம் வேறு திசையில் பயணம் செய்ததாகவும் பயணம் செய்தபோது நீர் மூழ்கி கப்பல்களை கண்காணிக்கும் கருவிகளை கடலில் போட்டுச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதிநவீன தொழில்நுட்ப சாதனங்களின் காரணமாக இந்தக் கருவிகளை கண்டுபிடிக்க முடிந்ததாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# பாக்குநீரினை ஜலசந்தியில் தமிழக மீனவர் மீது தாக்கு

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது, இலங்கை கடற்படையினர் சிங்கள அடி எப்படி இருக்கும் என்று சொல்லி நக்கலடித்தபடி கொடூரமாக தாக்குதல் நடத்தியுள்ளனர் என இந்திய ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய கடல் எல்லையான பாக் ஜலசந்தி பகுதியில் வலைகளை விரித்து மீன்பிடித்துக் கொண்டு இருந்தனர் இந்திய மீனவர்கள்.

அப்போது அங்கு குட்டி ரோந்து கப்பலில் இலங்கை கடற்படையினர் வந்தனர். அவர்களை பார்த்ததும் மீனவர்கள் வலைகளை சுருட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்படத் தயாரானார்கள். ஆனால் படகை சுற்றிவளைத்த இலங்கை கடற்படையினர் பைபர் படகில் தாவி 3 மீனவர்களையும் கண்மூடித்தனமாக சிங்கள அடி எப்படி இருக்கும் என்று சொல்லிச் சொல்லி தாக்கினர்.

மேலும் வலைகளை அறுத்து கடலில் வீசியதோடு, படகில் இருந்த டீசலையும் கடலில் கொட்டினர். அத்துடன் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் பறித்துக் கொண்டு அங்கிருந்து சென்றனர்.

உடல்முழுவதும் இரத்தக்காயங்களுடன் படகையும் இயக்கமுடியாமல் 3 மீனவர்களும் நடுக்கடலில் தத்தளித்தனர். நள்ளிரவு நேரம் அந்த வழியாக வந்தவேறு மீனவர்கள் காயமடைந்த 3பேரையும் காப்பாற்றி கரை சேர்த்தனர். குறிப்பாக ஈழத்தமிழர் பிரச்சினையில் இலங்கைக்கு எதிராக ஐ. நா.சபையில் அமெரிக்கா கொண்டுவர உள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வலியுறுத்தி தமிழகத்தில் போராட்டம் வலுத்து வருகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த இலங்கை கடற்படையினர் வீரர்கள் நேரடிதாக்குதல் நடத்த முடியாமல் கடலுக்கு செல்லும் தமிழக மீனவர்கள் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தியும் சிறைபிடித்தும் வருகின்றனர் என இந்திய செய்திகள் கூறுகின்றன.

கச்சதீவு கடல் வளம் இந்திய மீனவர்களால் அழிக்கப்படுவது உண்மையாகும். அதற்காக தினமும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை இந்திய அரசு கண்டும் காணாமல் இருப்பது வேதனைக்குரியது. இது விடயத்தில் இரு நாடுகளும் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும் என அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இரணைமடுக்குளத்தில் இரவு நேரத்தில் மீன்பிடிக்க இராணுவத்தினர் தடை

(முல்லைத்தீவு)

இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டு வரும் நிலையில் இரவு நேரத்தில் மீன் பிடிப்பதை இராணுவத்தினர் தடை செய்துள்ளதால் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இதில் கரைச்சி கிழக்கு நன்னீர் மீனவர் கூட்டுறவு சங்கத்தின் கீழுள்ள வட்டக்கச்சி, சிவிக் சென்ரர், மாயவனூர், மாவடி, இராமநாதபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 75 இற்கு மேற்பட்ட மீனவர்களும் இரணைமடு நன்னீர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழுள்ள 100 இற்கு மேற்பட்ட மீனவர்களும் இரணைமடுக் குளத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

போரினால் அனைத்தையும் இழந்து பொருளாதாரத்தில் பின்னடைவுள்ளவர்களாக மீன் பிடித் தொழிலை நம்பி தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வரும் நிலையில் இரவு நேரத்தில் மேற்குறித்த குளத்தில் மீன்பிடிப்பதற்கு இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டதால் பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர்.

முல்லைத்தீவு ,கிளிநொச்சி மாவட்டங்களில் ஏனைய நன்னீர் குளத்தில் இத்தடை இல்லை.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இரவு வேளையில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# நாட்டை நரகத்திற்குள் அமிழ்த்த அரசாங்கம் முயற்சிக்கிறது- ரணில்

நாட்டையும் மக்களையும் நரகத்திற்கு இட்டுச் செல்ல அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அதற்கு அனுமதியளிக்க முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச ரீதியான அழுத்தங்களை எதிர்த்து உள்நாட்டில் போராட்டம் செய்வதில் அர்த்தமில்லை. உண்மையில் இந்த நாட்டையும் மக்களையும் சர்வதேசத்தில் காட்டிக் கொடுத்த இந்த அரசாங்கத்திற்கு எதிராகவே மக்கள் வீதி யில் இறங்கி போராட்டம் நடத்த வேண்டும்.

நாட்டின் பாவ காரியங்கள் சர்வதேசத்திற்கு சொல்வதற்கில்லை. எனினும் இந்த அரசாங்கத்தின் பாவ காரியங்கள் பற்றிப் பட்டியலிட்டுக் கூறமுடியும். அரசாங்கத்தின் பிழைகளினால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவார்கள்.

2009 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹலால் சர்ச்சை மற்றும் முஸ்லிம்மக்கள் எதிர்நோக்கிவரும் ஏனைய பிரச்சினைகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ரணில் விக்ரமசிங்க உரையாற்றவுள்ளார்.

கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. முஸ்லிம் மக்கள் எதிர் நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கை மீனவர்கள் 15 பேர் இந்திய கடற்படையால் கைது

இந்திய கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன் பிடிக்கச் சென்ற 15 இலங்கை மீனவர்கள் இந்திய கரையோர பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற் தொழில் நீரியல்வள அமைச்சு கூறியது.

திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் இருந்து 3 படகுகளில் மீன்பிடிக்கச் சென்றவர்களே இவ்வாறு கைதாகியுள்ளனர். இவர்கள் ஆந்திரப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

15 மீனவர்களையும் விடுதலை செய்வது குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் கூறினார். கடந்த காலங்களில் இந்திய கடல் எல்லையில் கைதான அநேக இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே. (அ-2)




★கி.மு44-ஜூலியஸ் சீசரின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

★1602- டச்சு கிழக்கிந்தியக் கம்பனி அமைக்கப்பட்டது.

★1616- சேர் வால்ட்டர் ரலி 13 ஆண்டுகள் சிறைவாசத்திற்குப் பின்னர் லண்டனில் விடுவிக்கப்பட்டார்.

★1739- நாதிர் ஷா டில்லியை கைப்பற்றி நகரை சூறையாடினான்.

★1760- பொஸ்டன் நகரில் இடம்பெற்ற பெரும் தீ நகரின் 349 கட்டடங்களைச் அழித்தது.

★1815- எல்பா தீவில் இருந்து தப்பிய நெப்போலியன் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் இராணுவப் படைகளுடனும் 2 இலட்சம் தன்னார்வப் படைகளுடனும் பாரிசை மீண்டும் கைப்பற்றி நூறு நாட்கள் ஆட்சியை ஆரம்பித்தான்.

★1861-மேற்கு ஆர்ஜெண்டீனாவில் இடம்பெற்ற நிலநடுக்கம் மெண்டோசா நகரை முற்றாக அழித்தது.

★1916- அல்பர்ட் ஐன்ஸ்டீன் தனது சார்பியற் கோட்பாட்டை வெளியிட்டார்.

★1934- ஜப்பானில் ஹாக்கோடேட் என்ற இடத்தில் இடம்பெற்ற பெரும் தீ 4 ஆயிரத்து 170 சதுர கிலோ மீற்றர் நகரை அழித்து சுமார் 2 ஆயிரத்து 165 பேர் வரை உயிரிழந்தனர்.

★1942- போலந்தில் ஸ்ஜியேர்ஸ் என்ற இடத்தில் நாசி ஜேர்மனியரினால் கட்டாய வேலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 100 போலந்து நாட்டவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

★1942- மேற்கு உக்ரேனில் ரொஹார்ட்டின் நகரில் குழந்தைகள், பெண்கள் உட்பட 3 ஆயிரம் யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொல்லப்பட்டனர்.

★1948- சிங்கப்பூரில் முதலாவது தேர்தல் இடம்பெற்றது.

★1956- பிரான்சிடம் இருந்து துனீசியா விடுதலை பெற்றது.

★1974- லண்டன் பக்கிங்ஹாம் அரண்மனையின் வெளியே ஆன் இளவரசி, அவரது கணவர் கப்டன் மார்க் பிரிப்ஸ் ஆகியோரைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

★1988- எரித்தியாவில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினர் அஃப்பெட் நகரை கைப்பற்றினர்.


★2003- ஈராக்கின் விடுதலை என்ற பெயரில் அமெரிக்கக் கூட்டு படைகளால் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★1828-ஹென்ரிக் இப்சன் நோர்வே நாட்டவர், நவீன நாடக இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படுபவர் (இ.1906).

★1911- அல்போன்சோ ரோபில்ஸ், நோபல் பரிசு பெற்றவர். (இ.1991)

### ஹென்ரிக்இப்சன்



ஹென்ரிக் இப்சன் 1828 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி பிறந்தார். நவீன நாடக இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் நோர்வேயைச் சேர்ந்த இவர் நாடகாசிரியரும் கவிஞரும் ஆவார். மேலும் ஐரோப்பிய நாடகங்கள் மறுமலர்ச்சி பெற உதவியவர். இவரது பொம்மைவீடு நாடகம் உலகப் புகழ் பெற்றது.

தொடர்ந்து நாடகக் கலையில் வியத்தகு முறைமைகளை அறிமுகப்படுத்திய இவர் 1906 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி தனது 78 ஆவது வயதில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி முகாம்களில் வாழும் பெண்கள் அதிக வன்முறைகளை சந்திக்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

நலன்புரி நிலையங்களிலும் மீள் குடியேற்றப்படும் பகுதிகளிலும் உள்ள பெண்கள் அதிகளவில் வன்முறைகளுக்கு உட்படுகின்றனர் என யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் யாழ். மாவட்ட சிரேஷ்ட பாதுகாப்பு உதவியாளர் திருமதி காயத்திரி குமரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலக பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் நல்லூர் தியாகிகள் அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளிலும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகின்றனர். இவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் பெண்கள், சிறுவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு யு.என். எச்.சி.ஆர் நிறுவனம் அனுசரணை வழங்கி வருகிறது.

பெண்கள், சிறுவர்கள் வன்முறைகளுக்குள் ளாமல் பாதுகாக்கும் நோக்குடன் எமது அமைப்பு பல செயற்பாடுகளை முன்னெடுத்துவருவதோடு அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைப்புக்களுக்கும் ஆதரவு வழங்கி வருகிறது. இத்தகைய ஆதரவுகளும் அனுசரணைகளும் தொடர்ந்து வழங்கப்படும்.

மேலும் யாழ் மாவட்டத்தில் பெண்கள், சிறுவர்களின் அபிவிருத்திக்காக அரச சார்பற்ற நிறுவனங்களும் அரசாங்கமும் பல உதவிகளையும் செயற்திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறது.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ். மாவட்டத்தில் பெண்கள், சிறுவர்களின் அபிவிருத்திக்கான அரசாங்க உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவிலும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## உணவக பணியாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை

வவுனியா நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரிவோருக்கான மருத்துவ பரிசோதனைகள் இன்று புதன்கிழமை தொடக்கம் இடம்பெறவுள்ளதாக நகர சபை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணியில் இருந்து மாலை வரை இடம்பெறவுள்ளது..

மருத்துவ பரிசோதனைகளில் உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழை பெறவேண்டும் எனவும் நகரசபை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நெருப்பு காய்ச்சலுக்கான தடுப்பூசி மற்றும் வயிற்றுப் புழுக்களுக்கான சிகிச்சைகளும் உணவு கையாளும் நிலையங்களின் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2-266)

## நலன்புரி நிலையங்களை புனரமைப்பு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலுள்ள நலன்புரி நிலையங்களை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது. தற்போது அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர்.ரி.ஜெயசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வலி.வடக்கு பகுதிக்குட்பட்ட தெல்லிப்பழை, பலாலி, மயிலிட்டி போன்ற இடங்களைச் சேர்ந்த மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்படாத நிலையில் பருத்தித்துறையில் 7 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்த 1000 அங்கத்தவர் இவ்வாறு நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நலன்புரி நிலையங்களை புனரமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையங்களினை புனரமைப்பு செய்வதற்கான நிதி தற்போது ஒதுக்கீடு செய்யப்புட்டுள்ளது.

விரைவில் நலன்புரி நிலையங்களை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் கேட்ட போது நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளமை உண்மைதான் என பதிலளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## தமது உரிமைகளுக்காக பெண்கள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்

### யாழ்.அரச அதிபர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளிலாவது மகளிர் அமைப்புக்களும் பெண்களும் ஒன்றிணைந்து தமது உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும். அத்தோடு தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு எதிராகவும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என யாழ்.அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலக பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்பாட்டு குழுவின் ஏற்பாட்டில் நல்லூர் தியாகிகள் அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் உலகளாவிய ரீதியில் தற்போது அதிகரித்து வருகின்றன.

இந்த வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த சர்வதேச ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும் பிரதேச மட்டங்களிலும் பல மகளிர் அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. இருப்பினும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

இந்த வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அத்தோடு சர்வதேச மகளிர் தினத்திலாவது பெண்கள் தமது உரிமைக்காக ஒன்றிணைய வேண்டும். அதற்காக போராட வேண்டும்.

சர்வதேச மகளிர் தினம் எதற்கு கொண்டாடப்படுகிறது என்பது கூட பல பெண்களுக்குத் தெரியாமல் உள்ளது. இங்கு நடைபெறும் இந்த நிகழ்வில் கூட பெண்களின் எண்ணிக்கையும் பங்களிப்பும் மிகவும் குறைவாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## தமிழகத்தில் மாணவர் எழுச்சி அரசியலில் மாற்றம் வரும்


### ஐ.நா.வள அறிஞர் மணிவண்ணன்

ஈழத் தமிழர் விவகாரத்தினை மையப்படுத்தி தமிழகத்தில் உருவெடுத்துள்ள மாணவர் எழுச்சியானது தமிழகத்தில் மிகப் பெரிய அரசியல் மாற்றத்தினை ஏற்படுத்தி வருவதாக தமிழகத்தில் இருந்து ஜெனீவா சென்றுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஐ.நா. வள அறிஞர் குழுப்பிரதிநிதி பேராசிரியர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

1960 களின் பின்னர் இந்திய மத்திய அரசினை நோக்கியதாக தற்போது தோற்றம் பெற்றுள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் அறவழிப்போராட்டம் கவனத்தினைப் பெற்றதாக அமைகின்றதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பில் பன்னாட்டு விசாரணையினை வலியுறுத்துவதும் மற்றும் பொதுசன வாக்கெடுப்பை வலியுறுத்தி மிகப்பெரிய அரசியல் மாற் றத்தினை தமிழகத்தில் ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## தேசிய அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பில் கண்காட்சி



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தேசிய அருங்கலைகள் பேரவை ஏற்பாடு செய்துள்ள தேசிய கைப்பணியாளர்களது உற்பத்திகள் அடங்கிய கண்காட்சி நேற்றைய தினம் கொழும்பு. லயனல் வென்ட் கலை மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரகு மார திசாநாயக்க, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா மற்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அவரது பாரியார் புஷ்பா ராஜபக்ஷ ஆகியோர் இவ் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

25 தேசிய கைப்பணியாளர்களது உற்பத்திகள் இக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கண்காட்சி எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நடைபெறும். நாடளாவிய ரீதியில் கைப்பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களது தயாரிப்புகள் இக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அமைச்சின் செயலாளர் வீ. சிவஞானசோதி, அருங்கலைகள் பேரைத் தலைவர் புத்தி கீர்த்திசேன உட்பட பல இலங்கை, இந்திய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ-6)

## தூக்குத் தண்டனை நிறைவேற்றி வழக்கறிஞர்கள் போராட்டம்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவ பொம்மைக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றி வக்கீல்கள் நூதன போராட்டம் நடத்தியுள்ளனர்.

இலங்கை ஜனாதிபதியை போர்க்குற்றவாளியாக அறிவிக்க கோரியும் இலங்கை மீது அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்க வலியுறுத்தியும் தமிழகம் முழுவதும் தொடர் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இதேகோரிக்கைகளை வலியுறுத்தி தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வழக்கறிஞர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். தூத்துக்குடி நீதிமன்றம் முன்பு பேரணியாக புறப்பட்ட நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்கள், பிஎஸ்என்எல் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

அங்கு அலுவலகத்திற்கு பூட்டுப்போட முயன்ற அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அப்போது பொலிஸாருக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது.

இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பான சூழ்நிலை நிலவியது. அங்கு பேரணியில் இலங்கை ஜனாதிபதியை முகமூடி அணிந்த ஒருவரை சங்கிலியால் கட்டி இழுத்து வந்தனர்.

ஏராளமான பெண் வழக்கறிஞர்கள் உட்பட சுமார் 100 பேர் கலந்து கொண்டனர். இதேபோன்று கோவில்பட்டியில் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் இலங்கை ஜனாதிபதிக்கு தூக்கு போடும் போராட்டம் நடந்தது. மாதிரி சர்வதேச நீதிமன்றம் அமைத்து அதில் மஹிந்த ராஜபக்ஷ உருவ பொம்மைக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றினர்.

இதில் வழக்கறிஞர் சங்கத் தலைவர் தேன் மோகன் தலைமையில் 50 இற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தியோகத்தில் இருந்த படியே தொழில் செய்பவர் யார்?

சிலர் தொழில் மட்டும் செய்வர். சிலர் உத்தியோகம் மட்டுமே போதும் என்று இருப்பர். இன்னும் சிலர் உத்தியோகத்தினால் பிறருக்கு சம்பாதித்துக் கொடுப்பது எதற்காக? நாமே சொந்தமாக தொழில் செய்தால் முழுமையாக நமக்கே இலாபம் கிடைக்குமே என்று நினைப்பவர்கள். அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவது ஜாதகம் தான். ஒருவரது ஜாதகத்தில் உத்தியோக ஸ்தானத்தை குரு பார்க்க வேண்டும். 3,9 இற்கு அதிபதிகள் பலம் பெற்றிருக்க வேண்டும். 10 ஆம் இடத்திற்கு அதிபதி நவாம்சத்தில் சுப கிரகங்களின் பார்வை பெற்றிருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட கிரகநிலை அமைந்த ஜாதகத்தை பெற்றவர்கள் உத்தியோகத்தில் இருந்தபடியே தொழிலும் செய்வார்கள்.நண்பர்களோடு இணைந்து செய்யும் தொழில் மூலம் நல்ல இலாபத்தை பெறும் வாய்ப்பு இவர்களுக்கு உண்டு.

## பூஜை அறை பலன்

பூஜை அறையில் சாமி படம் வைத்திருக்கும் அலுமாரியின் மீது பழைய துணி போன்றவை வைப்பதை தவிர்ப்பது நல்லது. பூஜை அறை அல்லது பூஜை அலுமாரியை கதவு போட்டு பூட்டி வைக்கவும்.

இல்லையெனில் மஞ்சள் துணி போட்டு மறைக்கவும். திறந்து வைக்கக்கூடாது. சுவாமி படங்களை படுக்கை அறை அல்லது சமையல் அறையில் சிலர் வைக்கிறார்கள். இது முற்றிலும் தவறானது.

பூஜை அறையில் எப்போதும் மின் விளக்கு எரியும் படி பார்த்துக் கொள்ளுங்கள். வீட்டில் பூஜை அறையில் சாமிக்கு பூஜை செய்யும்போது மலர் இல்லாமல் பூஜிக்கக் கூடாது. பூசை அறையில் நிறைகுடம் தண்ணீர் வைத்து குரு காயத்ரி மந்திரத்தை 27 முறை பாராயணம் செய்து அந்த நீரை குளிக்கும் போது சேர்த்துக் கொண்டால் பல தோஷங்கள் விலகும். பௌர்ணமி தினத்தில் பூஜை அறையில் நேர் எதிரில் தீபம் ஏற்றி வழிபாடு செய்வது சகல வித சந்தோஷங்களையும் தரும்.

## கண் திருஷ்டி அகல என்ன செய்யலாம்?

கல் அடி பட்டாலும் கண் அடிபடக் கூடாது என்பது சொல் வழக்கு. பலரும் இந்த கண் அடியில் இருந்து தப்பிப்பதற்காக வீட்டு வாசலில் விகாரமான படங்களை மாட்டி வைப்பார்கள். இது முற்றிலும் தவறானதாகும். திருஷ்டிக்காக பேய் படங்களையும். பேய் படத்தின் நாக்கில் தேள் உள்ளது போன்றும் மாட்டி வைப்பார்கள். இதனை தவிர்ப்பது நல்லது. ஏனெனில் உங்கள் வீட்டில் உள்ள குழந்தைகளே கூட அந்த படங்களை பார்த்து பயப்படும் நிலை ஏற்படலாம்.

மேலும் பூதப்படம், அகோரமாக காட்சியளிக்கும் காளி போன்ற தெய்வங்களின் படங்களையும் வாசலிலோ அல்லது வீட்டில் பிற பகுதிகளிலோ கண் திருஷ்டிக்காக மாட்டக் கூடாது. ஒரு சிலர் தங்கள் வீட்டின் கிரகப்பிரவேசம் முடிந்து வெகு நாட்கள் ஆன பின்னரும் கூட திருஷ்டி பொம்மை மற்றும் திருஷ்டிக்காக வைக்கப்படும் கறுப்பு, வெள்ளி புள்ளி வைக்கப்பட்ட பூசணிக்காய்களை கயிற்றில் கட்டி தொங்க விட்டிருப்பார்கள். அதுவாக கீழே விழுந்தால்தான் கண் திருஷ்டி முழுமையாக அகலும் என்றும் சிலர் சொல்வார்கள். இதனால் எவரும் பூசணிக்காய்களை பல நாட்கள் ஆனாலும் அப்புறப்படுத்துவதில்லை. இது மிகவும் தவறானது. மூன்று நாட்களுக்கு மேல் அந்த திருஷ்டி பூசணிக்காய்களை அப்புறப்படுத்தி விடுவது நல்லது.

மூன்று நாட்களுக்கு மேலாக கயிற்றில் கட்டி தொங்கவிடப்பட்டுள்ள பூசணிக்காயில் இருந்து அழுகி தண்ணீர் வருவது அதன் காரணமாக கொசு, ஈ மொய்ப்பது போன்றவை இருக்கும். இதனால் வீட்டில் உள்ளவர்களுக்கு நோய் பரவி பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. ஏனவே திருஷ்டிக்காக என்று நமக்கு நாமே தீங்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம்.

வீட்டின் முன்புறம் சுவற்றில் திருஷ்டிக்காக சுவாமி படம் ஒட்டி வைக்கலாம். அதிலும் செல்வ விநாயகர், பிள்ளையார் பட்டி விநாயகர் போன்றவை மிகுந்த நன்மை அளிக்கும்.

## ஜோதிடக் களம்

## எதிர் வீடு

மனைக்கு நேரெதிராக உள்ள வீட்டின் காப்புச் சுவர் வாசலும் தலைவாசலும் கட்டவிருக்கும் காப்புச்சுவர் வாசலுக்கோ தலை வாசலுக்கோ நேரெதிராக இருக்கும் பட்சத்தில் சில முறைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு வீட்டின் வாசலுக்கு நேரெதிராக மற்றொரு வீட்டின் வாசல் (காப்புச்சுவர் வாசலாக இருந்தாலும் சரி) நேரெதிராக இருக்கும் பட்சத்தில் ஒரு வாசலின் அகலம் மற்றொரு வாசலின் அகலத்திற்குள் தடையேதுமின்றி நேராக செல்வது போல் இருப்பது மிகவும் அவசியம். இரு வாசல்களின் அகலத்தில் வேறுபாடுகள் இருந்தாலும் சிறிய அகலமுடைய வாசலின் இரு ஓரங்களிலிருந்து நேரெதிராக நேர் கோடு வரையும் பட்சத்தில் அது மற்றொரு (பெரிய) வாசலின் அகலத்திற்குள் தடையேதுமின்றி செல்வது போல் இருக்க வேண்டும். சிறிய வாசலின் அகலத்தில் பாதியோ குறிப்பிட்ட பங்கோ மற்றொரு வாசலின் அகலத்திற்குள் நேராக செல்வது போல் இருப்பது தவறு.

ஒன்று சிறிய வாசலின் அகலம் மற்றொரு வாசலுக்குள் நேரெதிராக முழுமையாக செல்ல வேண்டும் அல்லது இரு வாசல்களின் அகலத்தில் ஒரு சிறு பாகம் கூட ஒன்று மற்றொன்றிற்கு நேரெதிராக வராமல் இருக்க வேண்டும்.

அதேசமயம் தலைவாசலாக இருந்தாலும் காப்புச்சுவர் வாசலாக இருந்தாலும் அவ்வாசல் அமைந்திருக்கும் அறையின் உச்ச பகுதியிலும் கட்டடத்தின் உச்ச பகுதியிலும் வருவது போலிருப்பது அவசியம்.

## தே.போ.வரத்து ஆணைக்குழு அதிக பணம் அறவிடுகின்றது

### கிளி.த.பே.உரிமையாளர்கள் விசனம்

(முல்லைத்தீவு)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர்களிடம் வழி அனுமதிப்பத்திரத்திற்கு அதிக தொகை அறவிடப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கான வழி அனுமதிப் பத்திரத்திற்காக 36 ஆயிரம் ரூபா பணம் அறவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட தம்மிடம் ஏன் இவ்வாறு அதிக தொகை அறவிடப்படுவதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் கவலையடைகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் குறித்த கட்டணம் 3 ஆயிரத்து 500 ரூபா எனவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 ஆயிரம் ரூபாயும் அறவிடப்படுகின்ற போது கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் ஏன் 36 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றது என கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளி.மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-5-267)

## இலங்கைக்கு ஆதரவு தரவேண்டியது இந்தியாவின் தார்மீக பொறுப்பு

### வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவிற்கு காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.


தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.உலகின் அனைத்து நாடுகளும் இலங்கையை விமர்சனம் செய்யவில்லை எனவும் சில நாடுகள் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தியை மெய்யாகவே பாராட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த போது நாட்டில் இடம் பெற்றுள்ள அபிவிருத்தித் திட்டங்களை வரவேற்பதாக ஜப்பான் அறி வித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கின் அபிவிருத்திக்கு பாரியளவில் இந்தியா உதவிகளை வழங்கியுள்ளதாகவும் இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்த போதிலும் யுத்தத்தை விதைத்த சிலரது நோக்கங்கள் பூர்த்தியாகாத காரணத்தினால் இலங்கைக்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் புலிகளின் ஆதரவாளர்களிடம் பெற்றுக் கொண்டு இலங்கையை விமர்சனம் செய்து வருவதாகவும் இதற்கான ஆதாரங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)





இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய வன்னி பாதுகாப்பு தலைமையகத்திற்கு அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது வன்னி கட்டளைத்தளபதி அவரை கைலாகு கொடுத்து வரவேற்பதையும் இராணுவ அணிவகுப்பை அவர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அணுகுண்டுக்கும் அசையாத ஜப்பானின் அதிசய மரம்



ஜப்பானில் உள்ள Hibaku jumoku எனப்படும் மரத்துக்கு உலகிலுள்ள வேறெந்த மரத்துக்கும் இல்லாத தனி சிறப்பு காணப்படுகிறது.

1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மாதம் 6 ஆம் திகதி ஹிரோசிமாவில் அணுகுண்டு போடப்பட்ட போது நகரமே அழிந்ததுடன் பல வருடங்களுக்கு புல் பூண்டுகளே முளைக்காமல் காணப்பட்டது.

ஆனால் குறித்த மரமானது சுமார் 75 வருடங்களுக்கு மேலாக அதாவது அணு குண்டு போடப்பட முன்பிலிருந்து இன்று வரை உறுதியாக நிற்கிறது.

இன்று ஹிரோசிமா சோலையாக பூத்துக் குலுங்கினாலும் இவையெல்லாம் கடந்த 50 ஆண்டு காலப்பகுதியில் உருவானவை.

இதை A bombed tree என்று காரணப் பெயர் கொண்டும் சிலர் அழைப்பர். மிக குறைந்த அளவே காணப்படும் Hibaku jumoku மரங்களை ஜப்பான் கவனமாக பாதுகாத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கல்வி என்பது கடை சரக்கல்ல!

## அப்துல்கலாம் தெரிவிப்பு

(சென்னை)

நான் ஒரு ஆசிரியராக அறிவியலாளராக இருந்துள்ளேன். தற்போது ஓர் ஆசிரியராக கற்பிக்கும் தொழிலுக்கே நான் மீண்டும் வந்துள்ளேன். எனக்கு என்ன பிடிக்கும் என்று யாராவது கேட்டால் ஆசிரியராக மற்றவர்க ளுக்கு கல்வியறிவை ஊட்டும் பணிதான் மிகவும் பிடித்தமானது என்று சொல்வேன் என முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் உள்ள தேசிய உயர் நிலைப் பாடசாலையின் நூற்றாண்டு விழா வில் பங்கேற்று உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விழாவில் கூடியிருந்த மாணவர்களுக்கிடையே உரையாற்றிய அவர்,

நாங்கள் படித்த காலத்தில் கற்பித்தலுக்கு தேவையான எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாத அந்நாட்களில் கற்றல் என்பது மிகவும் இன்பமான அனுபவமாக இருந்தது.

எங்கள் ஆசிரியர்கள் கல்வியறிவை பரப்ப வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் உழைத்ததால் மாணவர்களால் அவர்கள் நேசிக்கப்பட்டார்கள். மதிக் கப்பட்டார்கள். அதனால் மாணவர்கள் இடை நிற்றல் என்பது நிகழ்ந்தது இல்லை.

கல்விக் கூடம் என்பது எவ்வளவு பெரிய கட்டடத்தில் எவ்வளவு பிரமாண்டமான கட்ட மைப்பில் எத்தனை பெரிய விளம்பரங்களின் மூலம் அடையாளம் காணப்படுகின்றது என் பது முக்கியமல்ல. தரமான நேசிக்கத்தக்க கல்விமுறை, உயரிய நோக்கம் கொண்ட ஆசிரியர்களின் பயிற்றுமுறை ஆகியவை தான் தரமான கல்வியறிவை விதைக்க முடியும். கல்வி என்பது கடைசரக்காக இருக்கக் கூடாது. நல்ல பாடத்திட் டம், உயரிய ஆசிரியர் களின் வாயி லாக ஆரம்பக் கல்வியின் போது மாணவர்களை சென்றடைய வேண்டும். கல்வியை வியாபாரமாக்கக் கூடாது. பெண்கள் மற்றும் குழந் தைகளுக்கு எதிரான குற் றங்களற்ற நாடாக இந்தியா மாற வேண்டும். சமுதாயத்தில் உள்ள எவருமே தாங்கள் தனி மைப்படுத்தப்பட்ட தாக உணரக் கூடாது.

சமுதாய பொருளாதார கண்ணோட்டத் தின் அடிப்படையில் தகுதியுள்ள எவருக்குமே வாய்ப்புக்கள் மறுக்கப்படாத கல்விமுறை நமது நாட்டில் மேலோங்க வேண்டும். நகரம், கிராமம் என்ற பாகுபாடுகளற்ற, தங்குதடை யற்ற, எரிசக்தி தரமான, குடிநீர் வளமான கல்வியறிவு ஆகியவற்றில் தன்னிறைவு பெற்ற நாடாக இந்தியா முன்னேற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

# நைஜீரியாவில் குண்டுவெடிப்பு; 25 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

வடநைஜீரியாவில் உள்ள கானோ பஸ் நிலையத்தில் நிகழ்ந்த தொடர் குண்டு வெடி ப்பு சம்பவங்களில் 25 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

நைஜீரியாவின் தென் பகுதிகளுக்கு செல் லும் பேருந்துகள் புறப்பட தயாரான போது இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்த பயணி ஒருவர் தெரிவித் துள்ளார். படுகாயமடைந்த பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அவர் களில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதால் இறந்தோர் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# 108 அடுக்குமாடி கட்டடத்தை கட்ட திட்டமிடுகிறது ஆஸி

(சிட்னி)

அவுஸ்திரேலிய அரசு 108 அடுக்குமாடி கட்டடத்தை கட்ட திட்டமிட்டுள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாண திட்ட அமைச்சர்மேத்யூ கய் கூறுகையில், மெல்பேர்ன் நகரத்தின் தெற்கு கடற்கரை பகுதியில் 388 மீற்றர் உயரம் கொண்ட கட்டடத்தை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

108 தளங்களுடன் இந்த கட்டடம் கட்டப்பட்டால் முதல் உலகப் போரில் உயிரிழந்தவர்களின் நினைவாக இந்நகரில் கட்டப்பட்டுள்ள போர் நினைவிடத்தின் மீது நிழல் விழும் என தயங்கினோம்.

எனினும், நினைவிடத்தின் நிர்வாகிகள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்பதால் இத்திட்டத்தை தொடங்க முடிவு செய்யப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்குள் கட்டப்படும் இக்கட்டடத்துக்காக 3 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் 300 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் இக்கட்டடத்தில் 646 குடியிருப்புகள், 288 அறைகள் கொண்ட ஆறு நட்சத்திர ஹோட்டல் மற்றும் அலுவல அறைகள் இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அவுஸ்திரேலிய கொடியில் உள்ளது போன்ற நட்சத்திர வடிவில் ஹோட்டலின் மேல் தளம் வடிவமைக்கப்படும் எனவும் அவர் கூறினார். டுபாயில் உள்ள உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் காலிபாவின் உயரம் 828 மீற்றர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஹெலி மூலம் தப்பிய கைதிகளை பொலிஸார் கைது செய்தனர்

கனடா நாட்டுசிறையிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் தப்பிய கைதிகள் மீண்டும் பிடிபட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவின் மான்ட்ரியல் நகர சிறையில் பெஞ்சமின் ஹுடோன் (வயது-36), டேனி புரொவிங்கல் (வயது-33) உள்ளிட்ட கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீது கொலை முயற்சிகள் உள்ளிட்ட வழக்குகள் உள்ளநிலையில் சிறையிலிருந்து தப்பிக்க திட்டமிட்ட டேனி, தன் நண்பர்களை தொடர்பு கொண்டார்.

அதன்படி அவரது நண்பர்கள் கடந்த 17 ஆம் திகதி தனியார் சுற்றுலா ஹெலிகொப்டரை வாடகைக்கு அமர்த்தினர். விமானியை துப்பாக்கி முனையில் மிரட்டி ஹெலிகொப்டரை சிறை க்கு மேலே பறக்குமாறு கட்டளையிட் டனர்.

சிறையில் தயாராய் இருந்த டேனி, பெஞ்சமினையும் தன்னுடன் வருமாறு கேட்டுக்கொண்டார்.

முதலில் தயங்கிய பெஞ்சமின் சிறையிலிருந்து தப்ப சம்மதித்தார். திட்டமிட்ட படி, ஹெலிகொப்டரிலிருந்து வீசப்பட்ட கயிறு ஏணியை பிடித்து அவர்கள் தப்பி சென்றனர்.

பகல் நேரத்தில் பலர் முன்னிலையில் நடந்த இந்த துணிகர நிகழ்ச்சியை பார்த்த ஏனைய கைதிகளும் பொலிசாரும் அதிர்ச்சியடைந்தனர்.

இதையடுத்து தேடுதல் வேட்டையில் இறங்கிய பொலிசார், அருகில் உள்ள செயின்-ஜெரோம் நகரில் மறைந்திருந்த கைதிகளை கைது செய்தனர். (அ-2)

# பாகிஸ்தானிடமிருந்து விருதைப் பெறக்கூடாது

## இந்திய இலக்கியவாதி நரங்கிடம் கல்வியாளர்கள் கோரிக்கை

இந்திய இலக்கியவாதி கோபி சந்த் நரங்கிற்கு வழங்கப்படவுள்ள பாகிஸ்தானின் விருதை ஏற்கக் கூடாது என கல்வியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் அரசு குடிமக்களுக்கு வழங்கும் 3ஆவது உயரிய விருதான சிதாரா-இ-இந்தியாஸ் சாகித்ய அக்டமியின் முன் னாள் தலைவரான கோபிசந்த் நரங் கிற்கு வழங்க கடந்த ஓகஸ்ட் மாதம் பாகிஸ்தான் சுதந்திர தினத்தன்று அறிவித்தது. இவ்விருது வழங்கும் விழா எதிர் வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் டில்லி பல்கலைக்கழகம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், அம்பேத்கர் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்வியாளர்கள் இவ்விருதை நரங் ஏற்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளனர்.

இரு இந்திய வீரர்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் கொன்றது. அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து பாகிஸ்தான் நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது போன்ற கண்டிக்கத்தக்க நிகழ்வுகள் நடந்துள்ள நிலையில், இந்த விருதை ஏற்பது அறிவு பூர்வமானதாக இருக்காது.

பாகிஸ்தான் போன்ற அரசிடம் இருந்து அர்த்தமற்ற கௌரவத் தைப் பெறுவது நமது சமூகப் பிணைப்பை பாழ்படுத்தும் செயலாகும். எனவே, நரங் இவ்விருதை ஏற்கக்கூடாது



என எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருதைப் பெறுவதற்கு நரங் பாகிஸ்தான் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று உள்துறை மற்றும் வெளியுறவுத் துறை அமைச் சகங் களுக்கு பல கல்வியாளர்கள் கடிதம் எழுதியுள்ளனர். (அ-2)

# பாச உணர்வு கொண்ட பல்லி 10 ஆண்டுகளாக உணவளிக்கிறது

ஜப்பான் நாட்டை சேர்ந்த ஒருவர் தன்னுடைய வீட்டை புதுப்பிப்பதற்காக மரத்தாலான சுவற்றை பெயர்த்து எடுத்துக் கொண்டு இருந்தார்.

ஜப்பான் நாட்டில் பெரும்பாலும் வீடுகள் மரத்தாலேயே கட்டப்பட்டிருக்கும். இரண்டு கட்டைக ளுக்கு இடையில் இடைவெளி விட்டு கட்டப்படிருக்கும்.

அப்போது இரண்டு கட்டைகளுக்கிடையில் ஒரு பல்லி சிக்கி இருப்பதை பார்த்தார். அது எப்படி சிக்கி இருக்கிறது என்று அந்தப் பல்லியைச் சுற்றிக் கவனித்தார். வெளிப் பகுதியில் இருந்து ஆணி அடிக்கும் போது அந்த ஆணி பல்லியின் காலில் இறங்கி இருக்கிறது.

அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த ஆணி குறைந்தது 10 வருடம் ஆகி இருக்கும். எப்படி இந்த பல்லி 10 ஆண் டுகள் உயிருடன் இருந்தது. இதை நாம் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்று மேற்கொண்டு வேலை செய்யாமல் அந்தப் பல்லியை கண்காணித்துக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் கழித்து இன்னொரு பல்லி அதன் அருகில் வருவதைக் கண்டார். அந்தப் பல்லி தன் வாயிலிருந்து உணவை எடுத்து சுற்றில் சிக்கிக் கொண்டிருந்த பல்லிக்கு ஊட்டுவதை பார்த்தார்.

அவ ருக்கு தூக்கிவாரிப் போட்டது. கட ந்த 10 ஆண்டுகளாக குறித்த பல்லி சுவற்றில் சிக்கிய தன் சக பல்லிக்கு உணவளித்து வந்துள்ளது. ஒரு பல்லி தன் பல்லிக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் 10 ஆண்டுகள் உணவளித்து வந்துள்ளது. ஒரு பல்லியால் முடியும் போது உங்களால் முடியாதா?....

இது ஜப்பான் நாட்டில் நடந்த உண்மை கதை எனக் கூறப் பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும் மறுபடியும் எழுந்து நிற்கும் ஆற்றலுடையது தான் உண்மை. -பிரையண்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கொதிக்கிறது தமிழகம் வெடிக்கிறது புரட்சி

யானை படுத்தால் குதிரை போலாவது இருக்கும் என்றொரு பழமொழி நம்மத்தியில் உண்டு. யானை படுத்துவிட்டதென்று யாரும் நினைத்து விடக்கூடாது. யானை படுத்தாலும் அது குதிரை போலாவது இருக்கும் - இருக்க வேண்டும்.

இந்தப் பழமொழி யானைக்கும் குதிரைக்கு மானதல்ல, ஈழத்தமிழர்களுக்கானது.

ஈழத்தமிழர்களின் போராட்டம் முடிந்துவிட்டது; முடிக்கப்பட்டுவிட்டது என்று நினைத்தவர்களுக்கு தமிழகத்தில் இப்போது ஈழத்தமிழர்களுக்காக எழுந்துள்ள ஆதரவு அலை,

அரசியல் என்ற எல்லையைத் தாண்டி மாணவர்கள் என்ற மாபெரும் சக்தியைக் கடந்து ஒட்டு மொத்தத் தமிழகத்திலும் புரட்சியாய் வெடித்துள்ளது.

ஜெனிவா தீர்மானத்தை இந்திய மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்ற கோஷம் வெளிப்படையானதாயினும், எவரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு தமிழகம் இத்துணை தூரம் கொதித்தெழுந்திருப்பதன் அடிப்படை என்னவெனில், ஈழத்தமிழர்களுக்கு வன்னியில் நடந்த கொடுரத்தை வெளிப்படுத்தியமையாகும்.

வன்னியில் நடந்த கொடூரப் போரின் எச்சங்களை சனல் 4 வெளியிட அது தமிழக மக்களை பெரிதாகத் தாக்கித் தகதகவெனும் நெருப்பாய் விளாசுகின்றது.

தமிழகத்தில் நடந்துகொண்டிருக்கும் மக்கள் கொந்தளிப்பும் வெகுண்டெழுந்த மாணவர் புரட்சியையும் கண்டு இலங்கை அரசு மௌனமாக இருக்கலாம். ஆனால், இந்திய மத்திய அரசு மௌனமாக இருக்கவே முடியாது.

ஈழத்தமிழர்களுக்கு ஆட்சி கிடைத்தால் அது தமிழகத்தை இந்திய தேசத்திலிருந்து வேறுக்கும் என்றெண்ணி, ஈழத்தமிழர்களுக்கு உதவுவது போலக் காட்டி உயிர்போக வைத்த இந்திய மத்திய அரசு எதைத் தடுக்க நினைத்ததோ அது நடப்பதற்கான கருக்கட்டல் தமிழகத்தில் நடக்கும் கொந்தளிப்பில் உருவாகின்றது - உயிர்பெறுகிறது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தால் ஈழத் தமிழர்கள் பயன்கொள்வாரோ இல்லையோ இந்திய மத்திய அரசு தான் செய்த வினையை அனுபவிக்கத்தான் போகிறது.

வன்னிப் போரில் இந்தியாவின் வகிபாகம் என்னவென்பதை இலங்கை அரசு சொல்ல மறுக்கலாம்; அமெரிக்கா மூடி மறைக்கலாம்; இந்திய மத்திய அரசு மௌனம் காக்கலாம். ஆனால், தமிழகம் சொல்லப் போகிறது.

அப்போதுதான் இந்திய மத்திய அரசின் கபடத்தனங்களை உலகம் அறியும். இவையாவற்றுக்கும் பிராயச்சித்தம் தேடுவதாயின், அதற்காக வேதம் ஓதி வேள்வி செய்ய வேண்டிய இடம் ஜெனிவாவாகவே இருக்க முடியும்.

# பாக். உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

பாகிஸ்தானின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலான ஹாசிம் குர்ஷி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இவர் தனது நியமனக்கடிதத்தை நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார். இதன்போதே ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராக செயற்பட்ட சீமா இலாஹி பலூச் கடந்த டிசம்பர் 15ஆம் திகதி தனது பதவிக் காலம் நிறைவடைந்தமையால் நாடு திரும்பினார். இதனை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே ஓய்வு பெற்ற மேஜர்ஜெனரலான ஹாசிம் குர்ஷி பாகிஸ்தான் அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-11)

## மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் 2012இல் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் இன்று மாலை 4.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் க. சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-11)

## மகளிர் தினவிழா

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பிரதேசவாரியான சர்வதேச மகளிர் தினவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மகளிர் தினவிழாவில் கலை நிகழ்வுகளும் பல்வேறு விசேட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-5-19)

## இரத்ததான முகாம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் ஆலய கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு வருடம் தோறும் நிகழும் இரத்ததான நிகழ்வு இவ்வருடமும் மூளாய் வீதி வட்டுக் கோட்டை சிறி கணேசா சனசமூக நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்பும் அடியவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினரும் தொண்டர் சபையினரும் கேட்டுள்ளனர். (அ)

# ரஜனி ரசிகர்கள் உண்ணாவிரதம்!

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு தனி ஈழம், இனப்படுகொலை செய்த ராஜபக்ஷவிற்கு தண்டனை, கச்சதீவை திரும்பப்பெறுதல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ரஜனிகாந்த் ரசிகர்கள் உண்ணாவிரதம் நடத்தினர்.

இலங்கைப் பிரச்சினையில் தமிழருக்கு ஆதரவான போராட்டம் இதுவரை இல்லாத அளவுக்கு இந்தியாவில் உச்ச கட்டத்தை எட்டியுள்ளது.

மாணவர்கள் ஆரம்பித்த இந்தப் போராட்டம் இப்போது மக்கள் போராட்டமாக வடிவம் பெற்றுள்ளது. இப்போது இதில் ரஜனி ரசிகர்களும் கைகோர்த்துள்ளனர்.

வேலூர் மாவட்ட ரஜனி ரசிகர் மன்றம் சார்பில் சோளிங்கர் நகரில் மார்ச் 19-ம் திகதி ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஏராளமான ரஜனி ரசிகர்கள் பங்கேற்றனர்.

ரஜனி ரசிகர்கள் ஏற்கனவே 2009-ம் ஆண்டு ஈழப் போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது தனி ஈழம் கோரி தொடர் உண்ணாவிரதம் இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது மீண்டும் ஈழப் பிரச்சினைக்கான போராட்டத்தில் தங்களின் உணர்வுகளைக் காட்ட ஆரம்பித்துள்ளனர் என ரஜனி ரசிகர் மன்றத் தலைவர் கூறியுள்ளார். (எ-11)

# பல இலட்சம் ரூபா பெறுமதியில் நன்னீர் மீன்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன

(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேசத்தில் பல இலட்சம் ரூபா பெறுமதியில் நன்னீர் மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டதாக வவுனியா பிராந்திய நீர்வள அபிவிருத்தி அதிகாரி பாலச்சந்திரன் நிரூபராஜ் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட வரட்சியினாலேயே மீன்குஞ்சுகள் அழிந்துள்ளது. இத னையடுத்தே இவ்வாறு வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நன்னீர் மீன்பிடித்தொழிலுக்காக பொதுவாக உள்ளீடுகள் இலவசமாகவே வழங்கப்படுகின்றது. தேசிய நீர்வள அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கடற்தொழில், மீன்பிடி அமைச்சின் கீழ் இயங்கும் பிராந்திய நீர்வள அபிவிருத்தி அலுவலகம் இதனை கண்காணித்து செயற்படுத்தி வருகின்றது.

இந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 18 மீனவ அமைப்புக்கள் செயற்பட்டுவரும் நிலையில் கனகராயன்குளம், மாமடு, வவுனியாகுளம், மருதமடு ஆகிய மீனவ சங்கங்கள் வரட்சியால் பெரிதும் பாதிப்படைந்திருந்தன. எனவே மார்ச் மாதமளவில் வழங்கப்பட வேண்டிய உதவிகளை கடந்த நவம்பர் மாதத்தில் வழங்கியிருந்தோம்.

இந்த வகையில் கனகராயன்குளம், மாமடு என்பவற்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மீன் குஞ்சுகளும் வவுனியா குளத்திற்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன் குஞ்சுகளும் வழங்கப்பட்டன. அத்துடன் வவுனியா குள மீனவ சங்கம் தாமாகவும் மீன் குஞ்சுகளை கொள்வனவு செய்திருந்தது.

இதை தவிர நிவாரணங்கள் என விசேடமாக எதுவும் வழங்கவில்லை. எனினும் வரட்சியால் பாதிக்கப்பட்ட நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு நிவாரணங்களை வழங்க எமது அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்துடன் இவ் வருடம் ஜனவரி மாதம் 1,415,000 மீன்குஞ்சுகளும் பெப்ரவரி மாதம் 33 இலட்சம் மீன் குஞ்சுகளும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி 27 இலட்சம் மீன் குஞ்சுகளும் வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களுக்கு நன்னீர் மீன்பிடியை மேம்படுத்து வதற்காக வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (அ-2-266)

## யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வாகனேரி முள்ளிவட்டுவான் பகுதியில் உள்ள வயல் வெளியிலேயே நேற்று முன்தினம் மாலை இப் பரிதாபச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான பொன்னுத்துரை மயில்வாகனம் என்ற விவசாயியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது,

யானையைக் கண்ட இவர் அருகில் உள்ள குளம் ஒன்றில் பாய்ந்து நீந்தி தப்பித்துக் கொள்ள முயற்சித்த போதிலும் இவரைப் பின் தொடர்ந்து துரத்திய யானையும் இந்தக் குளத்தினுள் சென்று இவரைத் தாக்கியதாகத் தெரியவருகிறது.

இதனைக் கண்ட பொதுமக்கள் இவரது சடலத்தை கரைக்கு கொண்டு வந்ததுடன் பொலிஸாருக்கும் தகவல் வழங்கி மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-2)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளுக்கு அர்ப்பணிப்போம்



✦ இறைவன் வெளியிலும் வெகுதொலைவிலும் இருப்பதாகத் தோன்றும் வரையில் அஞ்ஞானம் இருக்கும். ஆனால் நம் உள்ளத்துக்குள்ளேயே அவன் இருப்பதாக உணர்ந்து கொண்டால் ஞானம் உண்டாகிவிடும்.

✦ தனது இதயத்திற்குள் இறைவனைக் கண்டவன் வெளியுலகத்திலும் அவனைக் காண்பான். தனக்குள்ளேயே இறைவனைக் காணாதவன் கோயிலிலோ பிற இடங்களிலோ அவனைக் காண இயலாது.

✦ குணத்தாலும் அளவாலும் ஞானம் வேறுபடும். சாதாரண மனிதர்களுடைய ஞானம் ஓர் அறையை மட்டும் பிரகாசமடையச் செய்யும் தீபச்சுடரைப் போன்றது. பக்தனுடைய ஞானம் சந்திரனின் பிரகாசத்தைப்போன்றது. அவதாரபுருசரின் ஞானம் பலமடங்கு சக்தி கொண்ட சூரியப் பிரகாசத்தைப் போன்றது.

✦ இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் பொருட்கள் எல்லாம் ஆயிரம் மடங்காக நமக்கே மீண்டும் திரும்பிவிடும். ஆனால் செய்யும் செயல்கள் எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணிக்கும் எண்ணத்துடன் செய்பவர்களை இன்ப துன்பங்கள் தீண்டுவதில்லை.

✦ ஆயிரம் வழிமுறைகளில் முயன்றாலும் இறைவனுடைய அருளில்லாமல் எதனையும் அடையமுடியாது. இறைவனின் கருணை இன்றி யாரும் அவனை உணரமுடியாது.

✦ காற்று எங்கும் நிறைந்திருந்தாலும் பாய்மரத்தை அதன்போக்கில் விரித்தால்தான் படகு தடையின்றிச் செல்லும். அதுபோல இறைவனின் கருணை எங்கும் நிறைந்திருந்தாலும் மனம் என்னும் பாய்மரத்தை அவன் பக்கம் விரித்தால்தான் சாதகமான சூழ்நிலையை அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேரத்தின் சுழலில் சிக்கி மழுந்தது பங்களாதேஷ்


இலங்கை- பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கையணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பாடியிருந்த பங்களாதேஷ் அணி 240 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 346 ஓட்டங்களைப் பெற்றது.

மீண்டும் தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிவுவரை4 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. நேற்று 5 ஆம் நாள் ஆட்டத்தில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் இக்பால் 59, இஸ்லாம் 48, ஹக் 37, ரஹீம் 40 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹேரத் 7 விக்கெட்டுக்களையும் எறங்க 2 விக்கெட்டினையும் டில்சான் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்சுடன் சேர்த்து 160 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



துடுப்பாட்டத்தில் டில்சான் 57 ஓட்டங்களையும், சங்கக்கார 55 ஓட்டங்களையும பெற்றனர். ஆட்ட நாயகனாக இரண்டு இன்னிங்சிலும் 12 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஹேரத்தும் தொடர் நாயகனாக துடுப்பாட்டத்தில் கலக்கிய சங்கக்காரவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

2 போட்டிகளைகொண்ட இத் தொடரில் முதலாவது போட்டி சமநிலையான நிலையில் இப்போட்டியில் வெற்றி பெற்று இலங்கை அணி தொடரையும் தனதாக்கிக்கொண்டது.

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட பங்களாதேஷ நடுவர் நாதிர் ஷாவிற்கு 10 ஆண்டுகள் போட்டிகளில் பங்கு பற்ற தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இந்திய தொலைக் காட்சி ஒன்று பாகிஸ்தானின் நதீம் கவுரி, அனீஸ் சித்திக், பங்களாதேசின் நாதிர் ஷா, சர்புதுல்லா சைகத், இலங்கையின் காமினி திசநாயகே, மவுரிஸ் வின்ஸ்டன், சாகரா கல்லாகே ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டியது. இவர்கள் பணம் பெற்றுக் கொண்டு வீரர்களுக்கு தவறாக ஆட்டமிழப்புகளைக் கொடுத்தது உள்ளிட்ட பல முறைகேடுகளில் ஈடுபட்டது பின்னர் அம்பலமானது.

இது தொடர்பாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை (பி.சி.பி.,) விசாரணை நடத்தியது. இதில், நாதிர் ஷா மீதான சூதாட்ட மற்றும் ஊழல் புகார் உண்மையென தெரியவந்தது.

இதனால் நாதிர் ஷாவிற்கு 10 ஆண்டுகள் போட்டிகளில் பணியாற்ற தடை விதித்தது பி.சி.பி.

## 10 ஆண்டுக்கு தடை





# கனடாவுக்கு கென்யா பதிலடி

கனடா அணியுடனான இரண்டாவது ரி-20 போட்டியில் கென்ய அணி 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

டுபாயிலுள்ள ஐ.சி.சி குளோபல் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கென்ய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் றகேப் அக 31 ஓட்டங்களையும், பற்றல் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனடா அணி 18.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. கனடா அணி சார்பாக குணசேகர 38 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்டநாயகனாக 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய கென்ய வீரர் கொலின்ஸ் ஒபுய தெரிவுசெய்யப்பட்டார்.

அமெரிக்க டெனிஸ்;


# சரபோவா, நடால் சம்பியன்



### பெண்கள் பிரிவில்...

பரிபாஸ் ஓபன் டென்னிஸ் தொடரில், ரஷ்யாவின் மரியா ஷரபோவா இரண்டாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவின் இந்தியனா வெல்ஸ் நகரில், பி.என்.பி., பரிபாஸ் ஓபன் டென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, டென்மார்க்கின் கரோலின் வோஸினியாக்கியை 6-2, 6-2 என்ற கணக்கில் எளிதாக வென்று, கடந்த 2006இற்கு பின் இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.



### ஆண்கள் பிரிவில்.....

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத் தில் உலகின் 'நம்பர்-5' வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், ஆர்ஜென்டினாவின் ஜுவான் மார்டின் டெல் பெட்ரோவை சந்தித்தார். இதன் முதல் செற்றை 4-6 என நடால் கோட்டை விட்டார். பின் எழுச்சி பெற்ற நடால் இரண்டா வது செற்றை 6-3 என வென்று பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவது செற்றை, நடால் 6-4 என தன்வசப் படுத்தினார்.

2 மணிநேரம் 29 நிமிட போராட்டத்திற்கு பின் ஸ்பெயினின் நடால், 4-6, 6-3, 6-4 என்ற செற்களில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

## விளையாட்டுத் துளிகள்....

- ✔ இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத் 200 டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். பங்களாதேஷிற்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் அவர் இந்த 200ஆவது விக்கெட்டைக் கைப்பற்றினார்.
- ✔ இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியை வெற்றிபெற முடியுமெனத் தாங்கள் நம்பியதாகவும், நேரத்தை வீணடித்துப் போட்டியை வெற்றி தோல்வியற்ற நிலைக்குக் கொண்டு செல்லும் எண்ணம் இருந்திருக்கவில்லை எனவும் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.
- ✔ இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிய அவுஸ்திரேலிய அணிகளில் தற்போதைய அணி தான் மிகவும் மோசமானது. சுழற்பந்தை எதிர்கொள்ளக் கூடிய துடுப்பாட்ட வீரர்கள் அந்த அணியில் இல்லை. அதோடு விக்கெட்டுகளை கைப்பற்றக்கூடிய சிறந்த சுழற்பந்து வீரர்களும் அவுஸ்திரேலிய அணியில் இல்லை என விமர்சித்துள்ளார் இந்திய அணியின முன்னாள் தலைவரும் தொலைக்காட்சி வர்ணனையாளருமான கங்குலி.
- ✔ அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவர் மைக்கேல் ஸ்டார்க். கணுக்காலில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு சத்திரசிகிச்சை செய்வதற்காக 4ஆவது டெஸ்டில் பங்கேற்காமல் நாடு திரும்புகிறார். இதே போல் இந்திய தொடக்க வீரர் தவானும் காயம் அடைந்து உள்ளதால் 4ஆவது டெஸ்ட்டில் ஆடுவது கேள்விக்குறியாகவுள்ளது.

# 3 அடி வாங்கிய கிளாக்குக்கு முதுகுவலி

## 4 ஆம் கட்டப் போர் வொட்சன் தலைமையில்....?

முதுகு வலியால் அவதிப்படும் அவுஸ்திரேலிய அணித் தலைவர் கிளார்க் நான்காவது போட்டியில் விளையாடுவரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதுகுறித்து மைக்கல் கிளார்க் கருத்துத் தெரிவிக்கையில், நான்காவது போட்டியில் பங்குபற்றுவதை உறுதிப் படுத்தத் தன்னால் இயலுமான அனைத்தையும் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

தனது கிரிக்கெட் வாழ்வில் இதுவரை உபாதை காரணமாக டெஸ்ட் போட்டியொன்றைத் தவறவிட்டிருக்காத நிலையில், தான் நேர்முக எண்ணங்களுடன் காணப்படுவதாகத் தெரிவித்த மைக்கல் கிளார்க், நான்காவது டெஸ்ட் போட்டி முதலாவது டெஸ்ட் போட்டியாக அமைவதைத் தான் விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டார். எனினும் தன்னால் சிறப்பாகப் பிரகாசிக்க முடியாது விடின் நான்காவது டெஸ்ட் போட்டியில் தான் பங்குபற்றப் போவதில்லை எனவும் மைக்கல் கிளார்க் தெரிவித் துள்ளார்.

சென்னை, ஹைதராபாத், மொகாலி என தொடர்ந்து மூன்று போட்டிகளிலும் தோல்வி கண்ட அவுஸ்திரேலிய அணிக்கு இது மேலும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தும்.

### வொட்சன் தலைமையில்

கிளார்க் விளையாடாத பட்சத்தில் அணியின் தலைமைப் பொறுப்பை வொட்சன் ஏற்பார் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதல் இரண்டு போட்டிகளில் ஏற்பட்ட தோல்வியை எப்படி சீர்செய்யலாம் என அவுஸ்திரேலிய அணி நிர்வாகம் காரணம் கேட்டபோது அதற்கு பதில்கூற மறுத்ததால் அணியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டனர் அணியின் உபதலைவர் வொட்சன் உட்பட நான்கு வீரர்கள். நீக்கப்பட்ட மறு கணமே தாயகம் திரும்பினார் வொட்சன்.

இது குறித்து வொட்சன் தெரிவிக்கையில், '3ஆவது டெஸ்டிலிருந்து நீக்கப்பட்டதால், நிலை குலைந்து போனேன. இந்த நிலையில், எதிர்காலத்தில் நடக்கவுள்ள டெஸ்ட் போட்டியில் விளையாடுவது குறித்து பரிசீலிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. கிரிக்கெட் விளையாட்டை நான் அனுபவித்து விளையாடினேன். ஆனால், இப்போது எனது குடும்பத்தினருடன் சில வாரம் ஓய்வு எடுக்க விரும்புகிறேன்' என்று அப்போது தெரிவித்திருந்தார் வொட்சன்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அவர் கோபித்து கொண்டு செல்லவில்லை. அவரது மனைவி லீக்குக்கு முதலாவது குழந்தை பிறப்பதையொட்டி அவர் அவுஸ்திரேலியா சென்றதாகத் தெரிவித்தது.

இந்நிலையில் வொட்சனின் மனைவி லீக்கு அழகான ஆண குழந்தை பிறந்தது. குழந்தைக்கு 'வில்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். தந்தையான மகிழ்ச்சியில் உள்ள 31 வயதான வொட்சன், ஓரிரு நாட்கள் மனைவி, குழந்தையுடன் தங்கி விட்டு டில்லியில் எதிர் வரும் 22ஆம் திகதி தொடங்கும் கடைசி டெஸ்டில் விளையாடுவதற்காக இந்தியாவுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.



# 2 ஆம் இடத்துக்கு கடும் போட்டி

சர்வதேச டெஸ்ட் தரவரிசையில், இரண்டாவது இடத்தை பிடிக்க இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

டெஸ்ட் தரவரிசையில் மார்ச் 30 திகதியில் முதல் நான்கு இடங்களில் இருக்கும் அணிகளுக்கு, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) சார்பில் வெற்றிக் கேடயம் மற்றும் பரிசுத் தொகை வழங்கப்படும்.

இந்த ஆண்டு 128 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா முதலிடத்தை உறுதி செய்துவிட்டது. அடுத்த இடத்தை பிடிக்க இங்கிலாந்து (114), அவுஸ்திரேலியா (112), இந்தியா (111) இடையே மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

இதில், இந்திய அணி 2ஆவது இடம்பிடிக்க, டில்லி டெஸ்டில் (மார்ச் 22-26) அவுஸ்திரேலியாவை வீழ்த்தவேண்டும். அதேநேரம், மூனறாவது டெஸ்டில் (மார்ச் 22-26) இங்கிலாந்து அணி நியூசிலாந்திடம் தோல்வி அடைய வேண்டும். இதன் மூலம் இந்தியா, இங்கிலாந்து அணிகள் தலா 112 புள்ளிகள் பெறும். தசம புள்ளிகள் வித்தியாசத்தில் இந்திய அணி 2ஆவது இடத்தை பிடிக்கும்.

இங்கிலாந்து அணி, 2ஆவது இடத்தை தக்கவைத்துக் கொள்ள நியூசிலாந்துக்கு எதிராக குறைந்த பட்சம் சமநிலை செய்தாலே போதுமானது. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய அணி வெற்றி பெற்றால் கூட எவ்வித பாதிப்பும் வராது.

அவுஸ்திரேலிய அணி 2ஆவது இடத்துக்கு முன்னேற, டில்லி டெஸ்டில் இந்தியாவை கட்டாயம் வீழ்த்த வேண்டும். அதேவேளையில் இங்கிலாந்து அணி, நியூசிலாந்திடம் தோற்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணந்துறை றோயலை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் இறுதிப்போட்டிக்கு தெரிவு

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் பாணந்துறை றோயல் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக பிரிவு 2-க்கு தகுதி பெற்றுள்ளது.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுக்கு சபையினால் நடத்தப்படும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி தற்பொழுது நடைபெற்று வருகின்றது.

நேற்று நடைபெற்ற பிரிவு 3ற்கான காலிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும், பாணந்துறை றோயல் கல்லூரியும் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாணந்துறை றோயல் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அவ்வணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டத்தினை பெற்றுக் கொண் டது.

அதிகபட்சமாக சுதரக 29 ஓட்டத்தினையும், இசுறு 18 ஓட்டத்தினையும், சந்தி 18 ஓட் டத்தினையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஐங்கரன் 8 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்தது. 3 விக்கெட்டினையும், யதுசன் 10 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

150 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அவ் இலக்கினை 36.2 ஓவர்களில் எட்டியது.

துடுப்பாட்டத்தில் யசுதன் ஆட்டமிழக் காமல் 53 ஓட்டத்தினையும், கபில்ராஜ் ஆட்டமிழக் காமல் 35 ஓட்டத்தினையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சந்தி 5 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 2விக்கெட்டினையும், சமந்த 5ஓவர்கள் பந்து வீசி28 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் கடன 5 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டத்தினையும் விட்டுக்கொடுத்து 2விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இறுதிப் போட்டி நாளை வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியும், வந்தாரபட்ட பராக்கிரம கல்லூரியும் மோதவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 13 வயது பிரிவு கிரிக்கெட் அணி பிரிவு 2 போட்டிக்கு தகுதி பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

# அமெரிக்க தீர்மானத்தை எதிர்க்க ஆதரவு தேடும் இலங்கை அரசு

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் 22 வது கூட்டத்தொடரில் ஆதரவை திரட்டும் முயற்சியில் இலங்கை தொடர்ந்து மும்முரமாக ஈடுபட்டுவருவதாக ஜெனிவாவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா மனிதவுரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைப் பேரவைக்கான நாடுகளின் தூதுவர்கள் உள்ளிட்ட பலரையும் சந்தித்து வரும் இலங்கை தூதுக் குழுவினர் இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேணையை எதிர்க்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதேவேளை, மனிதவுரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடனான தனிப்பட்ட சந்திப்புக்கள், உப குழுக் கூட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளின் ஊடாக இவ்வாறு ஆதரவு திரட்டும் முயற்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இலங்கை மனிதவுரிமைப் பேரவையின் உறுப்பு நாடு அல்ல என்பதனால் இலங்கையினால் வாக்கெடுப்பை கோர முடியாது என்ற போதிலும், மற்றொரு உறுப்பு நாட்டின் ஊடாக வாக்கெடுப்பு கோரப்படும் என்று ஜெனிவா தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (எ-11)

# தமிழக...

இது குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அரங்கம் ஒன்றில் வைத்து கருத்து வெளியிட்ட அவர், தமிழக மாணவர்களின் இந்தப் போராட்டத்தை சாதாரணமான ஒரு விடயமாக கருதிவிட முடியாது என்று கூறினார்.

தமிழகத்தில் கோடிக்கணக்கான மாண்வர்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் ஒரு போராட்டத்தை இலேசான விடயமாக கருதிவிட முடியாது. அது அமெரிக்கா இங்கு கொண்டு வரவுள்ள இலங்கை தொடர்பான தீர்மானத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என நான் கருதுகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கை விடயம் குறித்தான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படுமா? இல்லையா? என்ற கேள்வி நிலவி வரும் இவ்வேளையில், இது குறித்து நாளை முடிபெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)


## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் ரவீந்திரபாலன் (ரவி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், விக்டோரியா லேன் ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் ரவீந்திரபாலன் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - பொன்மணி தேவி தம்பதியரின் அன்பு மகனும், அலன்ரோஸின் (பூவா) அன்புக் கணவரும், மரியநாயகி, காலஞ்சென்ற மரியசீலன் (காண்டீபன்), தயாளன், லெம்பேர்ட், மரிஸ்ரெலா, மெற்றில்டா, றெபேக்கா ஆகியோரின் அன்புத் தந்தையும்,

சுதர்சன், சிந்துஜன், மைதிலி ஆகியோரின் அன்பு மாமனும், ஜோசுவா, லீகியா, ஆரோன், கிதியோன், சீயோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் ஆராதனை நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
0774011248 மூத்த மகள் குடும்பத்தினர்
(2204)


# இந்திய அரசின் அழு...

இந்தத் தீர்மானத்தில் நவநீதம்பிள்ளையின் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை அமெரிக்காவும் வலியுறுத்தியிருந்தது.

இந்த தீர்மானத்தின் மீது பல்வேறு நாடுகள் இலங்கைக்கு எதிராக கடுமையாகவும், மென்மையாகவும் கருத்துக்களைச் சேர்க்க வலியுறுத்தியிருந்தன.

இந்த நிலையில், இறுதி அறிக்கை மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**சர்வதேச விசாரணை கைவிடப்பட்டது**

தற்போது இறுதியாக வாக்கெடுப்புக்காக முன் வைத்திருக்கும் தீர்மானத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தக் கோருவது என்பது நீக்கப்பட்டு விட்டது. இதற்கு இந்தியாவின் அழுத்தமே காணமாகும் என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் இந்திய பிரதிநிதி அனந்த பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை அரசு, வடமாகாணத்தில் தேர்தலை நடத்தப்போவதாக அறிவித்திருப்பதை வரவேற்றும், இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வடக்கில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், புதியதாக சில வரிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிராக ஒரு கடுமையான நிலைப்பாட்டை தொடக்கத்தில் மேற்கொண்டிருந்தது.

ஆனால்தற்போது தீர்மானம் முற்றிலுமாக நீர்த்துப்போகச் செய்திருப்பது என்பது இந்தியா-இலங்கை இடையேயான உறவுக்கான வெற்றி.

இந்த நிலையில் இலங்கைக்கு எதிராக பிரசாரம் மேற்கொண்டவர்களுக்கு தோல்வி ஏற்பட்டுள்ளது என்றும் அனந்த பத்மநாபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவின் இறுதித் தீர்மானம் மனித உரிமைக்ள் பேரவை கூட்டத்தில் தாக்கல் செய்யப் பட்டுள் ளது.

இந்த நிலையில் இந்தியா கருதுவது போல அவ்வளவு எளிதாகதீர்மானத்தை வலுவானதாக்கி விட முடியாது.

அப்படியே இந்தியா தீர்மானத்தை சற்று வலுவானதாக மாற்ற விரும்பினாலும் விவாதத்தின் போது வாய்மொழியாகத்தான் கருத்து தெரிவிக்க முடியும் என்று மனிதவுரிமை ஆர்வலர்கள் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மத்திய அரசிலிருந்து...

இலங்கை விவகாரம் தொடர்பிலான மத்தியஅரசின்நிலைப்பாட்டில்அதிருப்திஅடைந்த திமுக, மத்திய அமைச்சரவை மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து விலகியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை எனவும், அது தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என இலங்கை மீதான அமெரிக்கத் தீர்மானத்தில் இந்தியா திருத்தம் செய்யாதுவிட்டால் மத்திய அரசிலிருந்தும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்தும் தி.மு.க. விலகும் என தி.மு.கவின் தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து, இந்திய மத்திய அமைச்சர்களான ப.சிதம்பரம், ஏ.கே.அந்தோனி மற்றும் குலாம் நபி ஆசாத் ஆகியோர் அடங்கிய குழு நேற்று முன்தினம் மாலை கருணாநிதியுடன் சுமார் இரண்டரை மணி நேரம் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இதன்போது இலங்கைத் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட தாக்குதல்களை போர்க் குற்றங்கள் என்றும் இனப்படுகொலைகள் என்றும் பிரகடனப் படுத்தி இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற புதிய நிபந்தனையையும் கருணாநிதி விதித்திருந்தார்.

இந்நிலையில் இலங்கை விவகாரம் தொடர்பிலான மத்திய அரசின் நிலைப்பாடு தொடர்பில் நேற்றுக் காலை அதிருப்தி வெளியிட்ட கருணாநிதி, மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை உடனடியாக விலக்கிக் கொள்வதாக அறிவித்தார்.

இதன்போது இலங்கை விவகாரம் தொடர்பில் திமுக முன்வைத்த கோரிக்கைகள் குறித்து நேற்று காலை வரை மத்திய அரசிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்காத நிலையில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் சென்னையில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த கருணாநிதி, இலங்கை மீதான அமெரிக்கத் தீர்மானம் தொடர்பான தி.மு.கவின் கோரிக்கைகளை மத்திய அரசு பரிசீலனை செய்யவில்லை. இத்தீர்மான வரைபை மென்மையாக்கியதோடு, அது தொடர்பில் திமுக முன்வைத்த கோரிக்கைகள் எதனையும் மத்திய அரசு பரிசீலிக்கவில்லை.

இச்சூழலில் உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று மார்தட்டிக் கொள்ளும் இந்தியா, இந்தப் பிரச்சினையின் ஆழத்தை உணராமல் ஒதுங்கி நிற்பது இந்தியாவில் காந்தியடிகளும், இலங்கையில் தந்தை செல்வநாயகமும் சுதந்திரப் போராட்டத்திற்காகத் தேர்ந்தெடுத்து நடத்திய அறவழிகளை அறவே மூடுவதற்கான ஜனநாயக விரோதச் செயல்களாகும்.

எனவே இலங்கைத் தமிழ் மக்களுக்கு எவ்விதத்திலும் பயன்படாத சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், மத்திய அரசில் திமுகதொடர்ந்துநீடிப்பதுதமிழினத்துக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாக அமையும்.

இந்நிலையில் இலங்கை விவகாரம் தொடர்பிலான மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்து மத்திய அமைச்சரவை மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்து நாங்கள் விலகுகிறோம்.

இன்று திமுகவின் மத்திய அமைச்சர்கள் அனைவரும் தமது இராஜினாமாக் கடிதங்களை வழங்குவர்.

அதேவேளை, எமது கோரிக்கையை ஏற்று இந்திய நாடாளுமன்றத்தில் இலங்கை மீது தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் எமது நிலை குறித்து மறுபரிசீலனை செய்வோம் என மேலும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தொல் திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் அதிலிருந்து வெளியேறியுள்ளது.

இந்நிலையில் திமுகவின் இந்த அறிவிப்பை அடுத்து அதிர்ச்சியடைந்துள்ள காங்கிரஸ் கட்சி, தனது ஆட்சியைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள அவசரமாக ஆலோசனை நடத்தி வருவதாக தெரிய வருகின்றது.

இந்திய நாடாளுமன்ற மக்களவையில் உள்ள மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 540.

காங்கிரஸ் அரசு ஆட்சியில் நீடிப்பதற்கு 270 நாடாளுமன்ற உறுப்பிணர்களின் ஆதரவு தேவை. தி.மு.கவின் ஆதரவுடன் மொத்தம் 295 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மத்திய அரசுக்கு இருந்தது.

இந்நிலையில், மத்திய அரசிலிருந்து திமுகவின் 18 நாடாளுமன்ற உறுப்பினர் களின் ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் மத்திய அரசுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 277 ஆகக் குறைந்துள்ளது.

இதில் காங்கிரஸ் அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு தரும் சமாஜ்வாடி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி 43 நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2825

## விண்ணப்பப்படிவம் விற்பனையாகிறது

வடக்கு மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2013

★ விவசாய போதனாசிரியர் பயிலுநர் ★ விவசாய போதனாசிரியர் வகுப்பு III

★ கணித் திணைக்கள வெளிக்கள போதனாசிரியர் ★ முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III

★ வடக்கு மாகாண மண் பரிசோதகர் ★ வடக்கு மாகாண சாரதி சேவை வகுப்பு III

ஆகிய விண்ணப்பங்களை பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் ஏனைய பிரபலமான புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

முடிவு திகதி: 12.04.2013

எஞானம்ஸ் பிறிண்டேர்ஸ்

237, கந்தர்மடச் சந்தி, யாழ்ப்பாணம்.0777164613

(2203)

## வான் விற்பனைக்கு

மகேந்திரா படி விற்பனைக்கு

சுந்தரம் ஸ்ரோர்ஸ்

சீனியர் லேன் கலட்டி,

யாழ்ப்பாணம்.

(2198)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கருத்துக் கூறமுடியாது...

கட்சியின் தலைவருமான சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று தி.மு.கவின் விலகல் குறி த்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து இப்போதைக்கு கருத்துச் சொல்ல முடியாதென்று மட்டும் கூறியுள்ளார். முன்னதாக காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் இலங்கை விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டது.

அதில் பேசிய சோனியா காந்தி, இலங்கையில் வாழும் தமிழர்களின் உரிமைக்காக இந்தியா உறுதியான நிலைப்பாட்டுடன் எதிர்க்கும்.

இலங்கையில் நடந்த போரின் போது தமிழினப் படுகொலையில் ஈடுபட்ட இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை நடத்த இந்தியா ஆதரிக்கும் என தெரிவித்திருந்தார்.

இதேவேளை ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து தி.மு.க. விலகியதால் மத்திய அரசுக்கு ஆபத்தில்லை என்று மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கோரிக்கையை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. தமிழக கட்சிகளுடன் கலந்தாலோசித்து அரசு தேவையான முடிபுகளை மேற்கொள்ளும்.

நெருக்கடியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு எந்த ஆபத்தும் இல்லை. நாடாளுமன்றத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு பெரும்பான்மை உள்ளது.

மேலும் அமெரிக்கத் தீர்மானத்தில் திருத்தம் கொண்டு வருவது பற்றி ஆலோசனை நடந்து வருகிறது என்று காங்கிரஸ் கட்சியின் உயர்நிலைக் கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய ப.சிதம்பரம் தெரிவித்தார்.

அமெரிக்கத் தீர்மானத்தைப் பலப்படுத்துவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது என்றும், இலங்கை பற்றிய தீர்மானம் தொடர்பாக தமிழக கட்சிகளுடன் அரசு ஆலோசிக்கும் என்றும், தி.மு.க. தலைவர் கருணாநிதி, தீர்மானத்துக்கு 2 திருத்தங்களை முன்மொழிந்துள்ளார். அந்தத் திருத்தம் குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது என்றும் அவர் கூறினார். (எ-11)

# இந்திய பாராளுமன்...

அ.தி.மு.க. உறுப்பினர் தம்பிதுரை பேசுகையில், இலங்கையில் சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், அமெரிக்கா தீர்மானத்தை வலுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார்.

தி.மு.க., எம்.பி.டி.கே.எஸ். இளங்கோவன் கூறுகையில்,

இலங்கை அரசு கொடுத்த உறுதி மொழிகளை நிறைவேற்றவில்லை. மாணவர்களின் போராட்டத்தினால் தமிழகம் பற்றி எரிகிறது. இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தில் திருத்தம் செய்ய வேண்டும். திருத்தம் கொண்டு வருவதில் அரசின் நிலை என்ன என்பதை விளக்க வேண்டும். ஐ.நா. கவுன்சிலில் இந்திய அரசின் நிலை ஏமாற்றம் அளிப்பதாகக் கூறினார்.

இதன் பின்னர் லோக்சபாவில் அமளி ஏற்பட்டது. இதனையடுத்து லோக்சபா மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

ராஜ்ய சபாவிலும் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க உறுப்பினர்கள் இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக கோஷங்கள் எழுப்பினர்.

அவையின் மையத்திற்கு சென்று கோஷங்கள் எழுப்பினர். அவைத்தலைவர் ஹமீத் அன்சாரி, உறுப்பினர்களை இருக்கையில் சென்று அமருமாறு கூறினார். இருந்தும் அவையில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதனையடுத்து ராஜ்யசபா 15 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் அவை கூடிய போதும், கோஷங்கள் தொடர்ந்ததால் மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. அவை மீண்டும் கூடிய போது இலங்கை தமிழர் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து முழக்கமிட்டதால் அவை நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது. (எ-11)

# அமெரிக்காவின் இறு...

விசாரிப்பதாக அளித்த வாக்குறுதியை இலங்கை அரசு மீறிவிட்டதாக குற்றம்சாட்டியுள்ளார்.

இதையடுத்து பல்வேறு திருத்தங்களுடன் நேற்று வெளியிடப்பட்டுள்ள இறுதி வரைபுத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் தமிழர்கள் வாழும் பகுதியில் இராணுவத்தினரை உடனே அகற்ற வேண்டும்.

போரின் போது தமிழர்கள் பலர் காணாமல் போனது கவலை அளிக்கிறது. போர்க் குற்றம் தொடர்பாக இலங்கை அரசே விசாரணை நடத்த வேண்டும். எல்.எல்.ஆர்.சி. பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றும் திட்டம் இலங்கைக்கு இல்லை.

இலங்கை தமிழர்களுக்கு வாழ்வாதாரம், நீதி, நல்லிணக்கம் முழுமையாக செயல்படவில்லை. மக்கள் நலன் சார்ந்த அமைப்புக்களை இலங்கை அரசு வலுப்படுத்த வலியுறுத்தப்படும். இவ்வாறு அந்த வரைபுத் தீர்மானத்தில் இடம்பெற்றுள்ளது.

இதற்கிடையே இந்தியாவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் கோரிக்கையான சர்வதேச விசாரணை என்ற கோரிக்கை நீக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தீர்மானத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இலங்கை அரசின் எல்.எஸ்.ஆர்.சி. எனப்படும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டும் என தீர்மானத்தில் கூறப்பட்டிருந்த போதிலும், எல்.எல்.ஆர்.சி. திட்டத்தை செயல்படுத்தும் எண்ணம் இலங்கைக்கு இல்லை என கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை மதியம் அல்லது வியாழக்கிழமை தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று வெளியிடப்பட்டுள்ள இறுதி வரைபுத் தீர்மானம் தமிழர்களுக்கு ஏமாற்றத்தைதான் தந்துள்ளது. உப்புசப்பில்லாத இந்த தீர்மானத்தினால் இலங்கை தமிழர்களுக்கு கிடைக்கப்போவது ஒன்றுமில்லை என்ற கருத்து நிலவி வருகிறது. (எ-11)


## வேலைவாய்ப்பு

நான்காம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் Canadian Company சாதாரண தரம் (O/L) படித்து முடித்த துடிப்பு மிக்க இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்க முன்வந்துள்ளது.

தகுந்த பயிற்சி வழங்கப்பட்டு உள்வாங்கப்படுவார்கள் பயிற்சிக் காலத்தில் ரூபாய் 12,000/- குறையாத சம்பளத்தை முகாமையாளருடன் கலந்து தீர்மானிக்க முடியும்.

பயிற்சியின் பின் International தரச் சான்றிதழ்களுடன் நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் கவர்ச்சிகரமான சம்பளம் (35000 ரூபாய்) வழங்கப்படும்.

சிறப்பம்சம் : வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணம் வழங்கப்படும் தங்குமிட வசதி வழங்கப்படும். (ஆண், பெண் இருபாலாருக்கும்)

தொடர்புகளுக்கு : 0778330074, 0217212045, 0772151014


# பிக்குகளு...

கடந்த 2 நாட்களுக்கு முன்னர் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்துபரபரப்புஅடங்குவதற்குள் நேற்று முன்தினம் காலையில் சென்னை மத்திய ரயில் நிலையத்திலும் புத்த பிக்குகள் மீது 3 பேர் கொண்ட கும்பல் சரமாரி யாக தாக்குதலில் ஈடு பட்டது.

இச்சம்பவங்களை தொடர்ந்து பொலிஸார் புத்த பிக்குகள் தங்கி இருக்கும் இடங்கள் மற்றும் அவர்கள் வந்து செல்லும் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று காலையில் புத்த காயாவில் இருந்து புறப்பட்டு ரயில் மூலமாக சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு 120 சிங்களவர்கள் வந்தனர்.

தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்ரயிலில் 40 பேரும், ஜிடிஎக்ஸ்பிரஸ்ரயிலில் 120 பேரும் சென்ட் ரயிலில் வந்து இறங்கியதும், அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இன்ஸ்பெக்டர் சேகர் தலைமையிலானபொலிஸார் அவர்களை பத்திரமாக அழைத்து சென்றனர்.

சிங்களவர் மீதான தாக்குதல் காரணமாக நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத்தூதரகம், ஏர் லைன்ஸ் அலுவலகம் மற்றும் எழும்பூரில் உள்ள இலங்கை வங்கி ஆகியவற்றிலும் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-11)


## தேவை

கொம்பியூட்டர் ரைப்பிங், போட்டோ பிரதி தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

'பிரகாந்த்'

(திருநெல்வேலி கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

0773138881

(2193)



## தொடர்பு கொள்ளவும்

அரச ஊழியர் நட்ட ஈட்டுக் கொடுப்பனவு மற்றும் சாதாரண பொதுமக்கள் நட்ட ஈட்டுக் கொடுப்பனவு படிவங்களை பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் வாய்ந்தவர்களால் சிறந்த முறையில் துறைசார்ந்தவர்களின் அறிவுறுத்தலுக்கமைவாக பூர்த்தி செய்து பெற்றுக்கொள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.இல - 0775712883, 0215682951

நிர்வாகி

றொபட்சன் கொம்பியூட்டர் சென்றர்

(கிளி மத்திய கல்லூரிக்கு முன்பாக)

ஆனந்தபுரம் - கிளிநொச்சி.

(சி-2746)



## மணல் மண் வேண்டுமா?

- கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
- இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
- உங்கள் இடத்திற்கே கொண்டு வருகிறோம்.

4 1/2 டிராக்டர் 20,500/=

தொடர்பு: ராம்

072 63 78 546

(C-2729)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிருத்திய அழைப்பும்



மண் மகிழ: 01.04.1943

கண் நெகிழ: 18.02.2013

### அமரர் கந்தையா இரத்தினசிங்கம்

(முன்னாள் உரிமையாளர் சாரதாஸ் புடைவையகம்)

நெஞ்சிலும் தோளிலும் சுமந்தீர்கள் உங்களுக்காக வாழாது
பிள்ளைகளுக்காக வாழ்ந்து மறைந்தீர்கள் தந்தையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

கடந்த 18.02.2013 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா இரத்தினசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (20.03.2013) புதன்கிழமை நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரையும் அழைக் கின்றோம்.

31/1 குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்

(2200)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org